# விஷ்வவாணி சமர்ப்பண்

Vol. 37 - Issue 8 | August 2024 | Rs. 10/-



AUGUST '24

விஷ்வவாணி சமர்ப்பண்

**பதிப்பு அலுவலகம்**
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500062
✆040-27125557, 94909-38982
E-mail: samarpan@vishwavani.org

**நிர்வாக அலுவலகம்**
20, ராகுல் தெரு, TMP நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை – 600053
✆ 94431-27741
E-mail: vishwavaninet@vishwavani.org

## பருகப்போவது

2 சிந்தனைக்கு
3 நிர்வாக இயக்குநர் கடிதம்
7 சிறப்புக் கட்டுரை
11 ஓர் பிரார்த்தனை
12 சின்னச் சின்ன உணர்வுகள்
16 அன்பின் பகிர்வுகள்
20 தணிக்கை அறிக்கை 2023–24
21 ஜெப இயக்குநரிடமிருந்து
25 பணித்தளச் செய்திகள்

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒடியா, சோரா, பெங்காலி, ஆங்கிலம், காக்பொராக், நேபாளி ஆகிய 13 மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/–.

# சிந்தனைக்கு

- இயேசு வெளிப்படும்போது
வெட்கப்படாதவர்கள் யார்?
உயிரோடு இருக்கையில்
அவரை வெளிப்படுத்துகிறவர்களே!

- இயேசு விரலால் எழுதும்வரை
ஆவேசம்,
எழுதிய பின்
வெட்கம்!

- பாவங்கள் துரத்தும்,
ஒளிந்தால்
பரிசுத்தரின் கண்களும் துரத்தும்!

- மேல்வீட்டில் ஏறும் வரை
பேதுருவுக்கு வெட்கம்,
ஏறிய பின்னர்
சிறையிலும் தைரியம்!

- யோசேப்பைக்
குழியில் தள்ளுகையில்
வெட்கமே இல்லை,
அவன் விழியில் விழித்தபோதோ
வெட்கம்!

- இயேசுவை ருசிக்கும் வரை
சுவிசேஷ ஊழியம்
சுவை தருவதே இல்லை,
ருசித்துவிட்டால்
நிற்பதே இல்லை!



# நிர்வாக இயக்குநரின் கடிதம்!

என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை என முழு நிச்சயமாய் வாக்களித்துள்ள கர்த்தருடைய மாறாத நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களில் அநேகர் 'சமர்ப்பண்' மாத இதழைக் கருத்துடன் வாசித்து, கிரமமாய் ஜெபிக்கிறீர்கள். அத்துடன் கர்த்தருடைய சுவிசேஷப் பணிகளுக்காக உதாரத்துவமாய்க் கொடுத்தும் வருகிறீர்கள். உங்களை மனதாரப் பாராட்டி நன்றி செலுத்துகிறோம். உங்களுடைய பங்களிப்பு நிறைவான பலனை விஷ்வவாணியின் சுவிசேஷப் பணியில் காணச்செய்கிறது. மேலும் கர்த்தருடைய மகிமையான நாமத்தை நமது தேசத்தில் வல்லமையாகப் பரவச் செய்கிறது என்பதை இங்கு குறிப்பிடுகிறேன். எனவே கர்த்தரைக் கனம்பண்ணுகிற நீங்கள் மனிதர் முன்பாக வெட்கப்படுவதுமில்லை, வெட்கப்பட்டுப்போவதுமில்லை என்பதே வேத வாக்கு! (ஏசாயா 54:4; சங்கீதம் 34:5).

### ஜெப ஜீவியம் - ஜெய ஜீவியம்!

கிறிஸ்தவ வாழ்க்கையில் 'ஜெப ஜீவியம்' என்பது ஒரு முக்கிய அங்கமாகும். இயேசுவின் ஜெப ஜீவியமே நமக்கு ஓர் சிறந்த முன்மாதிரி. இயேசு தாமே இடைவிடாமல் ஜெபித்தார், தம்மைப் பின்பற்றியவர்களும் ஜெபத்தில் நிலைத்திருக்கக் கற்பித்தார். இந்த ஜெப ஜீவியம் நம்மைப் பாவ ஜீவியத்திற்கு விலக்கி பரிசுத்த ஜீவியம் மற்றும் கர்த்தரின் சித்தத்தை அறியும் உணர்வையும் பெற்றுத்தரும்; வாழ்க்கையில் முக்கிய முடிவுகளைத் தீர்மானிக்கும் நேரத்திலும், எதிர்வரும் பெரும் சவால்களை மேற்கொண்டு வெற்றி ஜீவியம் நடத்தவும் வழிவகுக்கும்; துக்கம் மற்றும் பெலவீன நேரங்களில் நம்மை ஆறுதல்படுத்தும், திடப்படுத்தும்; மற்றவர்களின் நல்வாழ்விற்காகக் கர்த்தரிடம் "பரிந்துபேசும்" மன்றாட்டு ஜீவியத்தைத் தருகிறது. இந்த ஜெப ஜீவியம் நம்மைப் பிறர் முன் வெட்கப்படுத்தாமல் கனப்படுத்தும் என்பதே வேத சத்தியம்.



பிரதி ஜூலை மாதத்தையும் "சிறப்பு ஜெப நேரங்களை" அநுசரிக்கும் மாதமாக பிரதி ஆண்டும் நாம் கையாண்டு வருகிறோம். இந்தியாவின் எல்லா மாநிலங்களிலுள்ள இலட்சோப விசுவாசிகள் அநுதினமும் அதிகாலை 4:00 மணி முதல் கூடி ஜெபித்து, தேசத்தின் நன்மைகளுக்காக - சுவிசேஷப் பிரபல்யத்திற்காக, தரிசன எட்டுகள் துரிதம் பெற திறப்பில் நிற்கிறார்கள். சிறப்பு ஜெபக் குறிப்புகள் பெற்று, இணைந்து ஜெபித்து, இந்திய தேச சுபிட்சத்தை நாடிட நீங்களும் வாருங்கள்! ஜெபிக்க அறிந்தவர்கள் வெட்கப்படுவதுமில்லை, வெட்கப்பட்டுப்போவதுமில்லை.

### இழந்துபோனதை மீட்டெடுக்க வழிநடத்தும் கர்த்தர்:

யோவேலின் தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பஞ்சங்கள், சாபங்கள், வறட்சி, புறஜாதிகளுக்குள்ளே தேவ ஜனங்கள் அடைந்த நிந்தை, வெட்கத்திற்கு, அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், பாவத்தில் நிலைத்திருந்ததே காரணம் என்பதை மிகத் தெளிவாக வாசிக்கிறோம். உபவாசித்து ஜெபித்து பாவங்களை விட்டு மனந்திரும்பினால் தேசத்துக்குச் க்ஷேமத்தைக் கொடுப்பேன் என்று கர்த்தர் வாக்கருளியிருக்கிறார் என யோவேல் 2:15-17; 21-27 வசனங்கள் தெரிவிக்கின்றன.

அதுபோல, ஆமோஸ் தீர்க்கதரிசனப் புத்தகத்திலும் அதிகாரம் 2ல் கர்த்தருடைய

வேதத்தை வெறுத்து, விபசாரம், வேசித்தனம், விக்கிரகாராதனை, நியாயமற்ற, பொல்லாங்கான செயல்களால் கர்த்தர் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பை வழங்கினார். மேலும் 4:6-11 வசனங்களில், "ஆகிலும் நீங்கள் என்னிடத்தில் மனந்திரும்பாமற் போனீர்கள்" என்று 5 முறை கடிந்துரைக்கிறார். எனவே, 4:12ல் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு, இல்லையெனில் உனக்கு "ஐயோ" என்றுரைத்தார் கர்த்தர்.

எனவே, பிரியமானவர்களே, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சண்ய நாள் (2 கொரி. 6:2); இப்பொழுதே மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் (அப். 17:30) கர்த்தரால் கட்டளை பிறந்துள்ளது. தேவனுடைய நாளிலே வெட்கப்பட்டுப்போகாமல், அவருடைய சமுகத்தில் நிற்கவேண்டுமானால், இப்பொழுதே இயேசுவின் இரத்தத்தால் உன் பாவங்கள் போகக் கழுவப்படு! இனி நீ வெட்கப்பட்டுப்போவதில்லை, மனிதர் முன்பு தலைநிமிர்ந்த வாழ்வு உங்களுக்கு நிச்சயமே! உங்கள் சிறையிருப்பு மாறும், சுகவாழ்வு துளிர்க்கும், இழந்துபோனதை மீட்டெடுப்பீர்கள் (ஏசாயா 62:8; ஆமோஸ் 9:14,15; யோவேல் 2:18-19), அல்லேலூயா!

**உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்:**

சுவிசேஷத்தை அறிந்தவர்களுக்கும் அதைப் பிரகடனப்படுத்தத் துடிக்கும் அனைத்து விசுவாசிகளுக்கும் ஏசாயா 61:1-7 வரை உள்ள பகுதியில் வாக்குத்தத்தம் உறுதிப்பட எழுதப்பட்டுள்ளது. மிகுந்த சந்தோஷமும், தேசத்தில் இரட்டிப்பான சுதந்திரமும், நித்திய மகிழ்ச்சியும் அவர்களது பங்காயிருக்கும். அவர்கள் சந்ததியானது ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும், இரட்சிப்பின் வஸ்திரம் உங்கள் குடும்பத்தாரின் சொந்தமாயிருக்கும், பூமி தன் விளைச்சலைத் திரளாய்த் தரும், கர்த்தரால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள் என 9-11 வசனங்கள் கூறுகின்றன.

சுவிசேஷப் பணிகளுக்காக ஜெபிக்கும், கொடுக்கும், உழைக்கும் நீங்கள் யாவரும் வெட்கப்படுவதில்லை, வெட்கப்பட்டுப்போவதும் இல்லை என சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். கர்த்தர் உங்களுக்குச் செய்தருளின எல்லா நன்மைகளுக்குத் தக்கதாக அவர் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துவதே (ஏசாயா 63:7) இன்றைய எதிர்பார்ப்பு! ஆம், கர்த்தர் உங்களை நிச்சயமாகவே மேன்மைப்படுத்துவார்!

**நற்செய்திப்பணியில் உள்ளங்கை மேகம் எழும்புகிறது:**

எலியா தீர்க்கதரிசியின் காலத்தில் ஓர் "உள்ளங்கை மேகம்" எழும்பி, பெருமழையை ஏற்படுத்தியதுபோல, அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட விஷ்வவாணி நற்செய்திப்பணியின் மூலம் "திரளான ஆத்தும அறுவடையை" எதிர்நோக்கி ஜெபத்துடன் முன்செல்கிறோம். அதிகம் செய்திருக்கிறோம் எனத் திருப்திகொள்ளாமல், திரள் அறுவடையில் நோக்கமாய் இருக்கிறோம்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரம் உயர்த்தும் வாஞ்சையுடன் தரிசனத் தடத்தில் தாழ்மையுடன் தடம்பதிக்கிறோம்.

தற்சமயம் 29 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள 222 மாவட்டங்களில் 337 மக்களினங்கள் நடுவில் 2145 ஊழியர் குடும்பம், 447 திருமணமாகாத இளைஞர்கள் என 4737 ஊழியர்களுடன், அறியப்படாத 10,497 கிராமங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷப்பணி இடம்பெறுகிறது. 7917 இடங்களில் நடைபெறும் வேதபாட வகுப்புகள், 3310 பணித்தளங்களில் இடம்பெறும் ஞாயிறு ஆராதனைக் குழுக் களுக்காகவும், திருமுழுக்கு பெற ஆயத்தப்படும் 11,905 புதிய விசுவாசிகளுக்காகவும் கர்த்தரைத் துதியுங்கள்.

137 பணித்தளங்களில் இடம்பெற்றுவரும் புதிய ஆலயக் கட்டடப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள். இந்த ஆண்டில் 7000 புதிய கிராமங்களை சுவிசேஷத் தீபமேற்றி ஆசீர்வதித்திட 1400 சுதேச ஊழியர்கள் தேவை, பாரத்துடன் ஜெபியுங்கள்.

## கிழக்கு மற்றும் வடகிழக்குப் பிராந்தியப் பணிகள்:

ஒடிசா, மேற்கு வங்காளம், சிக்கீம், அசாம், திரிபுரா, மணிப்பூர், மாநிலங்களில் 22,000 கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றும் தரிசனத் திட்டத்தில் தற்சமயம் 2984 கிராமங்களில் சுவிசேஷப் பணிகள் சுதேச ஊழியர்கள் மூலம் இடம்பெற்றுவருகிறது. மேகாலயா, மிசோராம், நாகாலந்து மாநிலங்களில் உள்ள திருச்சபைகளோடு இணைந்து செயல்படுவதின் மூலம் பெறப்படும் ஜெபம், பொருளாதார வளங்களைக் கொண்டு சுவிசேஷத்தால் ஒருமுறைகூட சந்திக்கப்பட்டிராத வடகிழக்கு மாநிலங்களின் அறியப்படாத கிராமங்களில் சுவிசேஷ தீபம் ஏற்றிடப் பிரயாசப்படுகிறோம்.



கடந்த ஜூன் மாதம் 10-18ம் தேதிகளில் மிசோராம், மணிப்பூர், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களுக்குப் பிரயாணப்படுவதற்கும், அங்குள்ள திருச்சபைத் தலைவர்களையும் பணித்தள ஊழியர்களையும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட விசுவாசிகளையும் சந்தித்து ஊக்கப்படுத்தவும் வாய்ப்பு பெற்றேன். திருச்சபைகளின் வரவு செலவு ஒதுக்கீட்டில் மேலும் அதிகப்படியான தொகைகளை “நற்செய்திப்பணியின் விரிவாக்கத்திற்காக” முதலீடு செய்யவும், திரளான “சுவிசேஷகர்களை” அறியப்படாத கிராமங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும் ஏற்ற நல்தீர்மானங்களைத் திருச்சபையின் தலைவர்கள் மேற்கொண்டதையும் கண்டோம். திருச்சபைகளின் வளர்ச்சியில் விஷ்வவாணி நற்செய்திப்பணியும் தனது முழுப் பங்கை நிறைவேற்றும்.

## தென் மத்திபம் மற்றும் மேற்கு இந்தியப் பிராந்தியப் பணிகள்:

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிராவை உள்ளடக்கிய இம்மாநிலங்களில் தற்சமயம் 3350 கிராமங்களில் சுவிசேஷப் பணிபுரிகிறோம். நமது தரிசனம் 26,000 கிராமங்களில் “சுவிசேஷ தீபம்” ஏற்றிட வேண்டும் என்பதாகும். இதுவரை 693 ஆலயக் கட்டடங்கள் கட்டப்பட்டு, 45,766 முதல்-தலைமுறை விசுவாசிகள் திருமுழுக்கு பெற்று, கர்த்தரை ஆர்வமுடன் ஆராதித்து வருகிறார்கள். 2142 வேதபாட வகுப்புகளில் கிரமமாக வேத வசனங்களைக் கற்று, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகிறார்கள்.



ஆந்திர மாநிலம் - ஸ்ரீகாகுளம் மாவட்டத் தளங்களைப் பார்வையிடவும், புல்லமானுகுடா, பொடிசா பணித்தள ஆலய மங்கலப்படைப்பு ஆராதனைகளில் பங்குபெறவும், ஆபிரகாம் நகரில் இடம்பெற்ற இரவுக் கூடுகையில் பங்கேற்று விசுவாசிகளை ஊக்கப்படுத்தவும் ஜூன் 22,23 தேதிகளில் சிறந்த வாய்ப்பைப் பெற்றேன். ஜெபம், தியாக ஈகையினால் பணித்தள ஆலயங்களைக் கட்டிக்கொடுத்த திரு. S. ஜெயபால் அவர்கள் குடும்பத்தினரையும், கோவில்பட்டி நெகேமியா ஜெபக்குழுவினரையும் அன்புடன் பாராட்டி நன்றிகூறுகிறேன். தொடர்ந்து விஷ்வவாணியின் சுவிசேஷப் பணிகள் யாவையும் உங்கள் ஜெபத்தில் தாங்குங்கள்.

## தரிசன விரிவாக்கத்தில் தென்னிந்தியாவின் பங்கு:

விஷ்வவாணியின் தரிசனச் செயலாக்கத்தில் இந்திய அளவில் 66 சதவீதப் பங்குகளைத் தமிழ்நாடு, கேரள மாநிலங்களில் உள்ள விசுவாசிகளும் திருச்சபைகளும் பொறுப்பேற்றுள்ளது தேவனைத் துதிக்கத் தக்கது. அனைத்துத் திருச்சபையின் தலைவர்கள், விசுவாசிகள், பணிப்பங்காளர்கள், தன்னார்வப் பிரதிநிதிகள், ஜெபக்குழுப்

பொறுப்பாளர்கள், முன்னேற்றப்பணியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் யாவருக்கும் நன்றிகூறுகிறேன். கர்த்தர் உங்களை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் விதைக்கப்பட்ட சுவிசேஷ விதைகள், இன்று முப்பதும் அறுபதும் நூறுமாகப் பலன்தந்து வருகிறது. அதிகம் பெற்றோம், நிரம்ப ஆசீர்வதிக்கப்பட்டோம், ஆசீர்வாதத்தின் வடிகால்களாய் உலகமெங்கும் காணப்படுவோம் என்கிற அர்ப்பணிப்புடன் சந்ததி சந்ததியாகக் கர்த்தருக்கு மகிமையாக வாழ்ந்து வருகிற உங்களை மனதார நினைத்து ஜெபிக்கிறோம், வாழ்த்துகிறோம்!

இப்பணிக்கு தொடர்ந்து உங்களது பாரமான ஜெபங்களும், உதாரத்துவ ஈகைகளும், விரைந்து செயல்படும் கால்களும் அவசியம் தேவை என்பதையே உங்களிடம் தாழ்மையுடன் வேண்டுகிறோம். சேமிப்புப் பெட்டியை உங்கள் தியாகக் காணிக்கைகளால் நிரப்புங்கள். அறியப்படாத ஒரு கிராம நற்செய்திப்பணிக்கு மாதம் ரூபாய் 4000/- கொடுத்து ஆதரியுங்கள். சிறப்பு நன்கொடைகளைத் தாராளமாய் வழங்கிடுங்கள். மேலும் இப்பணியை உடன் விசுவாசிகளுக்கு அறிமுகப்படுத்துங்கள். இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் கர்த்தரால் கனம்பெறுவீர்கள் என்பது மெய்யே!

**ஆட்சிக்குழு, பொதுக்குழு கூடுகைகள்:**



விஷ்வவாணியின் வருடாந்திர ஆட்சிக்குழு, பொதுக்குழு கூடுகைகள் 12.07.2024 அன்று ஹைதராபாத்தில் உள்ள நமது தலைமையகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. கடந்த நிதியாண்டின் ஊழிய அறிக்கைகள் கர்த்தருக்கு மகிமையாக சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுகள் தணிக்கை செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் தரிசனத் திட்டத்தின்படி முன்செல்ல தகுந்த ஆலோசனைகளும், சீர்தூக்கிப் பார்த்தலுடன் கூடிய ஜெப நேரங்களும் அநுசரிக்கப்பட்டது. இந்நிதியாண்டின் பட்ஜெட் ரூ. 110 கோடியை இலக்காகக் கொண்டு ஊழியச் செயல்திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சிக்குழுவினர், பொதுக்குழுவினர், விஷ்வவாணி ஊழியங்களின் தலைவர் P. செல்வராஜ் அண்ணனுக்கும், தலைமைச் செயலகம், நிர்வாக அலுவலக ஊழியர்கள் மற்றும் ஒன்பது துறைகளின் பொறுப்பாளர்களுக்கும் நன்றிகூறுகிறேன்.

**சுதந்திரம், சுபிட்சம், சுபம்:**

நமது இந்திய தேசம் சுதந்திரம் பெற்று 77 ஆண்டுகள் நிறைவுறும் 15.08.2024ம் நாளை நன்றிப்பெருக்குடன் நினைவுகூருவோம். மகிழ்வுடன் கொண்டாடுவோம். நமது நாடு எல்லாவிதத்திலும் சுபிட்சம் அடைய அரும்பாடுபட்ட தேசத் தலைவர்கள் அனைவருக்கும் மரியாதை கலந்த வணக்கத்தை காணிக்கையாக்குவோம். தேசத்தில் உள்ள அனைத்து மொழி, கலாச்சாரம், இனம் மற்றும் சிறப்பு தன்மை படைத்த மக்கள் இனங்கள் அனைவரும் 'சுபம்' பெற்று ஒற்றுமையுடன் வாழ வழிவகுப்போம். "சுதந்தர இந்தியாவின் கொடி பட்டொளி வீசிப் பறக்க" அனைவரையும் சம அன்புடன் ஏற்று வாழ்வோம், வாழ்க பாரத தேசம்! ஆட்சியில் இருக்கும் அனைத்துத் தலைவர்களையும் நமது ஜெபத்தில் தாங்குவோம். உங்கள் யாவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்.

உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். ஏசாயா 61:7

சென்னை-53
15.07.2024

கர்த்தரின் திராட்சத்தோட்டப் பணியில்,
W. வில்சன் ஞானக்குமார்

2009 ஆகஸ்ட் – சமர்ப்பண் இதழுக்காக எமில் அண்ணன் எழுதிய சிறப்புக் கட்டுரையின் மறுபதிப்பு

# சுவிசேஷத்தை அறிந்தவர்கள் அறிவிப்பதற்கு வெட்கப்படுவதில்லை, அறிவிப்பதினால் வெட்கப்பட்டுப் போவதும் இல்லை!

அன்பார்ந்தவர்களே, நீங்கள் இயேசுவை அறிந்தவர்களா?
இதுவே முதல் கேள்வி! இயேசுவை அறிதல் அறிவு சார்ந்ததல்ல, இதயம் சார்ந்தது!

> கணவன் - மனைவி என்ற அமைப்பில்
> ஒருவரை ஒருவர் அறிதல் அறிவினால் அல்ல, இதயம் பேசுவதினால்!
> இதயம் ஒருவரை ஒருவர் அறியும்போது
> தம்பதிகள் நடுவில் அன்பு அளவுக்கும் மிஞ்சி பொங்கும்!
> ஒரு மைல் அல்ல, பல மைல்கள் செல்வதும் சொல்லாமலே நடக்கும்!

“யோனாவின் குமாரனாகிய சீமோனே,
இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?”
என்ற யோவான் 21:15,16,17 ஆகிய வசனங்களில்
அன்பு, நேசம் என்று வரும் அனைத்தும் இதயம் சார்ந்ததே!
இயேசுவின்மேல் இதயம் சார்ந்த அன்பு இருந்தால்
இயேசுவின்மேல் அளவு கடந்த அன்பும் பொங்கும்!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் அந்த அன்பின் உறவுக்குள் வந்தவர்கள்
அளவுக்கு மிஞ்சி இயேசுவை நேசிப்பார்கள், சேவிப்பார்கள்!
இடைவிடாமல் இயேசுவிடம் பேசிக்கொண்டே இருப்பார்கள்,
ஸ்தோத்திர பலிகளை ஏறெடுத்துக்கொண்டே இருப்பார்கள்,
அவருடைய வசனத்தையே தியானித்துக்கொண்டு இருப்பார்கள்,
சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும்
இயேசுவை அறிவிக்கிறவர்களாகவே இருப்பார்கள்!
சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் **வெட்கப்படுவதே இல்லை!**
ஒருவர்கூட விடாமல் ‘இயேசு’ என்ற நாமத்தைக் கேட்கட்டும், விசுவாசிக்கட்டும்,
நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கட்டும் என்பதே
அவர்கள் இதய வாஞ்சையாக இருக்கும்,
அதற்குக் காரணம் அவர்கள் நேசம் இதயம் சார்ந்தது.
அவர்கள் மரணத்திற்கு ஒப்புவிக்கப்பட்டவர்களை விடுவிக்கும் வீரர்களாக,
கொலையுண்ணப் போகிறவர்களை காப்பாற்றும் செய்தியாளராக இருப்பார்கள்!

பிரியமானவர்களே, இயேசுவை பகிரங்கப்படுத்த வெட்கப்படுகிறவர்கள் யார்?
தங்கள் அந்தரங்க ஜீவியத்தில் இயேசுவின் பாதத்தில் தங்காதவர்களே!
இயேசுவைப் பறைசாற்ற வாய் கூசுகிறவர்கள் யார்?
குற்றமுள்ள மனச்சாட்சியினால் குத்தப்பட்டுக்கொண்டே இருப்பவர்களே!
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நாம் செய்த சகல பாவங்களையும் கழுவி,

நம்மைச் சுத்தமாக்கும் பொழுது
நாம் சத்தமாக சொல்வது இயேசுவின் நாமத்தையே!
இயேசுவை மனமார நேசிப்பவர்கள் யார்?
தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்ற நிச்சயம் உடையவர்களே!
அவர்கள் **வெட்கப்படுவதே இல்லை!**
இயேசுவில் தாங்கள் பெற்ற நன்மைகளை மறைக்கவே மாட்டார்கள்!

> "உம்முடைய நீதியை
> நான் என் இருதயத்திற்குள் மறைத்து வைக்கவில்லை,
> உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையும் சொல்லியிருக்கிறேன்;
> உமது கிருபையையும் உமது உண்மையையும்
> மகா சபைக்கு அறிவியாதபடிக்கு
> நான் ஒளித்துவைக்கவில்லை" - சங். 40:10

■ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் இதயத்தில் பிரவேசிக்கக் கண்டவர்கள்
அவரை அடைத்து வைப்பது எப்படி?
தங்கள் வாய்களுக்கு பூட்டுப் போடுவது எப்படி? **வெட்கப்படுவது எப்படி?**

■ வாயார பொய்சொல்ல வெட்கப்படாத இந்த உலகில்
சத்தியத்தை அறிந்தவர்கள், சத்திய பரனை நேசிக்கின்றவர்கள்
மனதார இயேசுவை அறிக்கை செய்ய **வெட்கப்படுவது எப்படி?**

■ எந்தெந்தப் பாட்டுகளையோ பாடுவதற்கு உலகம் வெட்கப்படவில்லையே,
தங்கள் நாவில் புதுப்பாடல் பெற்றவர்கள்
இயேசுவுக்குத் துதி பாடல்கள் பாடுவதற்கு **வெட்கப்படுவது எப்படி?**

■ எது எதற்கு முன்னெல்லாம் கை கூப்பி நிற்க மனிதர் வெட்கப்படவில்லையே,
அவர்கள் அனைவருக்காகவும் ஜீவனைக் கொடுத்தவரை அறிந்தவர்கள்,
இயேசுவிடம் வாருங்கள் என்று கை கூப்பி
அனைவரையும் வருந்தி அழைப்பதற்கு **வெட்கப்படுவது எப்படி?**

■ புழுபுழுத்து சாகப்போகும் மனிதனின் சத்தத்தைக் கேட்டு
இது மனித சத்தம் அல்ல, தேவ சத்தம் என்று
முக ஸ்துதி செய்ய அவர்கள் வெட்கப்படவில்லையே,
சீனாய் மலையின் சத்தத்தைக் கல்வாரி மலையில் கேட்டவர்கள்
காணாமல் போன ஆடுகள் மேய்ப்பனின் குரலை கேட்கட்டும் என்று
உழைப்பதற்கு **வெட்கப்படுவது எப்படி?**

■ மனதைக் கறைபடுத்தும் கற்பனைக் கதைகளை, படங்களை புத்தகமாக்கி,
கடை கடையாக விற்பனைசெய்ய மனிதர் வெட்கப்படவில்லையே,
மனிதரின் மனதை மாற்றும் பரிசுத்த வேதாகமத்தை
கூடை கூடையாகச் சுமந்து, வீடு வீடாக, தெருத் தெருவாக,
கிராமம் கிராமமாகத் திரிந்து விநியோகிக்க விசுவாசிகள் **வெட்கப்படுவது எப்படி?**

■ தாகோன் திரும்பத் திரும்ப தலைகீழாக விழுந்தாலும்,
தூக்கி தூக்கி நிறுத்தி வைத்து அதன்முன் சாஷ்டாங்கமாய் விழுவதற்கு
அவர்கள் வெட்கப்பட வில்லையே,
மனிதர் அனைவரும் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு

சிலுவையில் தம் தலை சாய்த்த இரட்சகரை,
உயிர்த்தெழுந்த ஆண்டவரை நேசிக்கிறவர்கள்
சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு **வெட்கப்படுவது எப்படி?**

➨"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து
நான் வெட்கப்படேன்" (ரோமர் 1 : 16) என்ற
பரிசுத்த பவுலின் வரிசையில் இணைந்தவர்களில் **நீங்களும் ஒருவரா?**

➨பொய்யில் மிதக்கும் ஓர் உலகில்
மெய்யானவரைக் கூறுகிறவர்களில் **நீங்களும் ஒருவரா?**

➨"என் வாய் நாள்தோறும் உமது நீதியையும்
உமது இரட்சிப்பையும் சொல்லும்;
அவைகளின் தொகையை நான் அறியேன்" (சங். 71 : 15)
என்ற லட்சோப லட்ச விசுவாசிகளில் **நீங்களும் ஒருவரா?**

➨"என் விலங்கைக் குறித்து ஒநேசிமு வெட்கப்படவில்லை" ( 2 தீமோ. 1 : 16)
என்று பரி. பவுல் ஒநேசிமுவைப் பற்றிக் கூறுவதுபோல்
சுவிசேஷ ஊழியர்களின் துன்பங்களில், தேவைகளில் தயங்காமல்,
பயப்படாமல், வெட்கப்படாமல் பங்கெடுக்கும், கை கொடுக்கும்
ஒரு கூட்டம் விசுவாசிகளில் **நீங்களும் ஒருவரா?**

■ஆம் என்பீர்களாகில், ஒன்று கூற விரும்புகிறேன் -
நீங்கள் ஒருபோதும் **வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**

■கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பறைசாற்றுகிறவர்கள்
கர்த்தருடைய ஜனம் அல்லவா?
"என் ஜனம் ஒருபோதும் **வெட்கப்பட்டுப் போவதில்லை"** ( யோவேல் 2:26)
என்பது அவர்களுக்குச் சொந்தமானது அல்லவா!
அவர்கள் தனிப்பட்ட வாழ்வில், குடும்ப ஜீவியத்தில், பொருளாதாரத்தில்,
எத்தனை உபத்திரவங்கள் வந்தாலும்
அவர்கள் **வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**

■பாவங்கள், அநாகரிகங்கள் என்பது மலிந்துபோன இந்த உலகில்
மகா பரிசுத்தரைக் குறித்து அறிவிக்க சற்றும் வெட்கப்படாத, கூச்சப்படாதவர்களில்
நீங்களும் ஒருவர் என்றால்
இந்த உலகில் நீங்கள் **வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**

■ஓர் நாள் இந்த உலகை விட்டு சாவின் பள்ளத்தாக்கை கடந்துசெல்லும்போதும்
அவர்கள் **வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**


■பின்னொரு நாள் மகாராஜா திரும்ப வருவார்,
ஆம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயும்
**வெட்கப்பட்டுப் போவதே இல்லை!** (மாற்கு 8:38)

பிரியமானவர்களே, உலகில் உயிரோடு இருக்கும் இன்று,
இயேசுவின் சுவிசேஷ செய்தியை எவ்வளவாய் உயர்த்திக் கூறுகிறீர்களோ
அவ்வளவாய் உங்கள் பெயர் பரலோகத்தில் உயர்த்தி வாசிக்கப்படும்!

நீங்கள் இம்மையிலும் மறுமையிலும், எதிலும் எவரிடமும்
**வெட்கப்பட்டுப் போவதே இல்லை!** (மத்தேயு 10:32)
எனவே, அன்று அகிரிப்பா ராஜாவுக்கு முன் பரி. பவுல்
பயப்படாமல், வெட்கப்படாமல் இயேசுவின் சுவிசேஷத்தை ஒலிபரப்பினாரே,
நீங்களும் எந்த மனிதனுக்கும் பயப்படாமலும், வெட்கப்படாமலும்
இயேசுவை வெளிப்படுத்துங்கள்!

> "நான் உம்முடைய சாட்சிகளைக் குறித்து,
> ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன்" (சங். 119:46)
> என்ற தாவீது ராஜாவைப் போல்
> இயேசுவின் சுவிசேஷத்தை உயர்த்திக் கூறுங்கள்!
> அப்பொழுது, இரட்சிக்கப்படுகிறவர்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்படுவார்கள்,
> குளங்கள் திருமுழுக்குத் தொட்டிகளாகும்! நதிகள் யோர்தான் நதிகளாகும்!
> உங்கள் நிமித்தம் நித்தமும் ஜீவ புஸ்தகத்தில் பல பக்கங்கள் நிரம்பும்!
> பரலோகத்தில் தேவ தூதர்களுக்கு முன்
> கரகோஷமும் சந்தோஷமும் எழும்பும்!

எனவே, அன்பார்ந்த சகோதரனே, சகோதரியே,
சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு இன்றுவரை நீங்கள் தளர்ந்திருப்பீர்களானால்,
பயந்திருப்பீர்களானால், விலகி நின்றிருப்பீர்களானால்
இன்றே முழங்கால்படியிடுங்கள்!
உங்கள் ஐயங்களை, கூச்சங்களை, உள்பயங்களை
உடனடியாக பரிசுத்த ஆவியானவர் நீக்கிப்போடுவார்!
கீழ்த் தட்டின் யோனாவாக இருந்தால்
மேல் வீட்டின் பேதுருவாக உங்களை மாற்றுவார்!
அந்தகார சக்திகளுக்கு எதிராக போராடும் வீரராக மாறுவீர்கள்!
மெய்யான சீஷராக
செல்லும் இடமெல்லாம் 'சமாதானப் பாத்திரர்களை' சம்பாதிப்பீர்கள்!
தாழ்மையும், திறமையும் கொண்ட ஸ்தாபன, சபைத் தலைவராக,
அப்போஸ்தலர்களாக மாறி உலகையே கலக்குவீர்கள்!
உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் சுவிசேஷ முரசு ஒலிக்கும்!
கிறிஸ்துவை நேசிக்கும் நேசம் உங்களை சதா நெருக்கி ஏவும்!
உங்கள் மூலம் இந்தியாவின் ஆறு லட்சத்துக்கும் அதிகமான கிராமங்களில்
குறைந்தது ஒரு கிராமத்தில் இந்த வருடமே சுவிசேஷ தீபம் ஏற்றப்படும்!
ஓர் திருச்சபையும் மலர்ந்துவிடும்! ஆமென்!



**உலகில் உயிரோடு இருக்கும் இன்று,
இயேசுவின் சுவிசேஷ செய்தியை
எவ்வளவாய் உயர்த்திக் கூறுகிறீர்களோ
அவ்வளவாய் உங்கள் பெயர்
பரலோகத்தில் உயர்த்தி வாசிக்கப்படும்!
நீங்கள் இம்மையிலும் மறுமையிலும்,
எதிலும் எவரிடமும்
வெட்கப்பட்டுப் போவதே இல்லை!**

## ஓர் பிரார்த்தனை

பரிசுத்த பிதாவாகிய தேவனே, பரிசுத்தராகிய தம்மைத்
தொழுதுகொள்ளவும், ஆராதிக்கவும் படைக்கப்பட்ட மக்களாகிய நாங்கள்
ஏதேனை சீரழித்தோம்.
அன்று துவக்கம் எங்கள் உடலை, நாட்களை, வாய்ப்புகளை
சீரழித்துக்கொண்டே இருக்கிறோம்!
சீர்திருந்தவேண்டும் என்று எங்களுக்குள் சொல்லிக்கொண்டாலும்
பல சீர்திருத்தப் பள்ளிகளைத் திறந்தாலும்,
கடும் தண்டனைகளைக் கொடுத்துப் பார்த்தாலும்,
எங்களை எங்களால் சீர்திருத்த முடியவில்லையே!
பொல்லாத சிந்தனைகளால் மனதில் ஒருமுகம் இல்லையே!
கோபம் பொங்குவதினால் யாரிடமும் ஒருமனம் இல்லையே!
தீய பழக்க வழக்கங்களினால் உடல் நலமுமில்லையே!
சிருஷ்டி கர்த்தாவாகிய நீர் ஒருவரே
எங்களைச் சீர்படுத்த முடியும் என்பதினால்
எங்கள் பூமியில் சிலுவையை வலிய நட்டினீரே, ஸ்தோத்திரம்!
அதில் எங்கள் இரட்சகரைப் பார்க்கிறோமே, ஸ்தோத்திரம்!
பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாவிலிருந்தும், பிசாசிலிருந்தும்
எங்களை விடுவிக்கும் அந்த பரமஇரட்சகரை ஏற்கிறோம் பிதாவே!
அவரால் எங்கள் மனம் புதிய மனமாகுவதைக் காண்கிறோம் பிதாவே!
எங்கள் மாம்சம், இந்த உலகம், சத்துருவாகிய பிசாசு மூன்றின் மேலும்
'இயேசு' என்ற நாமத்தினால் ஜெயம் பெறுகிறோம் பிதாவே!
அறுவடையின் எஜமானே, எங்கள் எஞ்சிய நாட்களை
சிலுவை தரும் அந்த ஜெயத்தை தேவையுள்ள அனைவருக்கும்
அறிவிப்பதற்காகவே தத்தம் செய்கிறோம் பிதாவே!
சுவிசேஷத்தை கிராமங்கள், பட்டணங்கள் கேட்கட்டும்,
இயேசுவைக் காணட்டும், வாழட்டும் என்று தத்தம் செய்கிறோம் பிதாவே!
உலக இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமென்!

## சாட்சியும் அத்தாட்சியும்...



கவலையும் கண்ணீரும், சமாதானக் குறைவும், பணச்சிக்கல்களும் குடும்பத்தை அண்டுவதோ, அகலுவதோ – குடும்பத் தலைவரின் நடத்தையினால் என்பதற்கு என் சாட்சி அத்தாட்சி. இமாச்சலப் பிரதேசம் – காங்ரா ஜில்லாவின் சட்டர் கிராமத்தில் என் குடிப்பழக்கத்தால் குடும்பம் முழுவதுமே துயர சாகரத்தில் மூழ்கியிருந்தது. அதன் தாக்கம் வருடம் வருடமாக வறட்சியிலும் வறுமையிலும் எங்களை நகர்த்தியது. வீட்டைக் காட்டிலும் தெருவோரங்களில்தான் என் காலங்கள் சென்றது. என் மீது பரிதாபங் கொண்டோர் அநேகர். ஆனால் பரிகாரத்திற்கான மார்க்கம் காண்பித்தோரில்லை.

ஊழியர் பிரகாஷ் சந்தைச் சந்திக்கும் சந்தர்ப்பம் என் அண்டை வீட்டு விசுவாசி மூலம் வந்தது. ஜெபக்கூடுகைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். ஜெப அனுபவத்தில் சற்றும் பழக்கமில்லாத எனக்குள் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிந்தது. என் நல்வாழ்வுக்காகக் கரிசனையுள்ள ஒருவர் உண்டு என்பது. ஆம், அவர் இயேசு இரட்சகர். எப்பேர்பட்ட பாவிகளையும் சேர்த்துக்கொள்ளும் அவரது கரங்களில் சரணாகதியாய் விழுந்தேன். ஜெபங்கள், உபவாச ஜெபங்கள், ஆலோசனை நேரங்கள் எனும் அணுகுமுறைகள் என்னைக் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாய் மாற்றியது. இன்று மதுபானங்களை என் மனம் வெறுப்பதும், வசனம் கிடைக்குமிடங்களைத் தேடிச் செல்வதும், என் மனைவி பிள்ளைகளும் என்னுடன் அந்த அநந்த ஐக்கியத்தில் சந்தோஷத்துடன் பங்கெடுப்பதும் இயேசு என்ற மகான் செய்த மகா இரக்கமே! – பிசாம்பர் சிங், புதிய விசுவாசி.

எரேமியா 8:22

# பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?

– ஹாரிஸ் பிரேம், விஷ்வவாணி மீடியா

செல்வந்தரும் தனவானுமாகிய ஒரு தந்தைக்கு ஒற்றைக்கு ஓர் பிள்ளை இருந்தது. அப்பிள்ளையை அவர் அளவு கடந்து நேசித்தார். அவளுக்காகவே தன் இன்னுயிரையும் கொடுத்து விடுமளவுக்கு அவளை நேசித்தார். அவள் விரும்புகின்ற யாவும் அவளுக்கு கொடுக்கப்பட்டது. ஊட்டச்சத்து மிக்க பால், அந்த நாட்டிலேயே விளையும் முதல் தர விளைச்சலின் பலன்கள், மற்றும் அவள் விரும்பிய அனைத்தும் அவள் பெற்றுக்கொள்ள தடையில்லாதிருந்தது. அவளது ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் தேவையான அத்தனையையும் அந்த தனவானாகிய தகப்பன் பார்த்துக் கொண்டார். அந்த குமாரத்தி செல்வமாய் வளர்க்கப்பட்டாலும் சரியாக வளரவில்லை. திடகாத்திரமான சரீரத்தோடு யுவதியாக வளர்ந்திருக்க வேண்டிய அவள் வியாதியில் வீழ்ந்தாள்.

இந்த வியாதிக்கான காரணம் என்ன? எல்லாவற்றையும் பார்த்து பார்த்து சிறப்பாக செய்தோமே என்று அந்த தகப்பன் புலம்புகிறார். அவளது வியாதியை அகற்றி அவளை மரணப்படுக்கையிலிருந்து காப்பாற்றுவதற்கு அவள் வாழுகின்ற அந்த பிராந்தியத்தில் தயாரிக்கப்படும் மிகச்சிறந்த மருந்துகள் இல்லையோ? அம்மருந்துகளை வைத்து அவளது காயங்களை ஆற்றும் மருத்துவன் இல்லையோ? என்று அவர் புலம்புகிறார்.

எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தின் துவக்க அதிகாரங்களில் நாம் வாசிக்கும் பகுதியை எரேமியா இப்படித் தான் காட்சிப்படுத்துகிறார். கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்? (எரேமியா 8:22)

குமாரத்தியின் வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்ட மிகச்சிறந்த உணவுகள் இருக்கின்றது. அதைத் தாண்டி அவள் வியாதிப்பட்டால் மிகச்சிறந்த மருந்தும் இருக்கின்றது. அந்த மருந்தை எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை அறிந்த மருத்துவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அவள் மரணப் படுக்கையில் இருக்கிறாள்! இதற்கு யார் காரணம்? காரணம் யாராகவும் இருக்கட்டும், காரணிகள் எதுவாகவும் இருக்கட்டும். அதைக் குறித்து இப்போது ஆராய்ச்சிசெய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தகப்பன் நேசிக்கும் ஒரு மகளை இப்போது காப்பாற்றியாக வேண்டியதிருக்கின்றது. ஆனால் அம்மகளின் உயிரைக் காப்பாற்ற ஒரு கைதேர்ந்த மருத்துவனின் அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.

ஆனால் ரணத்தை அறுத்து சீழைப் பிதுக்கி காயத்திற்கு கட்டு போட்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய மருத்துவருக்கு பதிலாக, அந்த ஒப்பற்ற கீலேயாத்தின் பிசின் தைலத்தை வெளிப்பூச்சாய் பூசி வீணடித்து, சமாதானம் சமாதானம் ‘உன் மகள் பிழைத்துக்கொள்ளுவாள்’ என்று பொய்யாய்ப் பேசி அவளின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தும் போலி மருத்துவர்கள் பெருகிவிட்டதை எரேமியா மிகுந்த பாரத்தோடு படம் பிடித்துக் காட்டுகிறார்.

வேதப் புத்தகத்தின் தீர்க்கதரிசிகளிலேயே அழுகின்ற ஒரு தீர்க்கதரிசி என்றால் அது எரேமியாதான். தேவன் தெரிந்துகொண்ட அவருடைய பிள்ளைகள் தன்னுடைய கண்களுக்கு முன்பதாக தறிகெட்டுப் போய் அழிவதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாத பாரமிகுந்த மனிதனாக அவர் துடிப்பதை எரேமியா தீர்க்கதரிசன புத்தகம் முழுவதும் நீங்கள் பார்க்க முடியும்.

இப்படி எல்லாம் நினைத்து நினைத்து அழமுடியுமா என்றால், இயேசுவின் இதய பாரத்தை தம் இதயத்திற்குள் ஏற்றவர்களால் முடியும் என்பதுதான் விடை. சரி, இப்படி இவர்கள் அழுது அழுது என்ன சாதிக்கப் போகிறார்கள்? உண்மையில் அதறப் பதற அடித்து ஆகாயத்தில் சிலம்பம்பண்ணும் அநேகரை விட ஆண்டவரின் சமுகத்தில் அழுது சாதிக்கும் சிலரே பெரும் சாதனையாளர்கள்.

மற்றவர்களுக்காக அழுகிற இதயம் கொண்டவர்கள் தேவனின் இதயத்திற்கு மிகவும் அருகாமையில் இருப்பவர்கள். அவர்களுக்கு கிடைக்கும் பெரும் பாக்கியம், தங்களுடைய தேவைகளுக்காக ஒரு நாளும் அவர்கள் அழத் தேவை இருக்காது என்பதுதான். நாம் மற்றவர்களுக்காக கரிசனை இல்லாதிருக்கும் போது நம்முடைய பாடுகளும் நம்முடைய துக்கங்களும் வாழ்க்கையில் பெருகுவதைப் பார்க்கமுடியும். மாறாக, நம்முடைய வாழ்க்கையின் மூலம் எத்தனை பேரைக் கைதூக்கி விட முடியுமோ அவர்களுக்கெல்லாம் கை கொடுக்கும் போது நம்முடைய கரங்களை தேவன் பற்றிக் கொள்ளுகிறார்.

இஸ்ரவேலரைக் குறித்த எரேமியாவின் அழுகை சாதாரணமானதல்ல. “ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்” (எரேமியா 9:1).

எப்படிப்பட்ட வார்த்தைகள் பாருங்கள்! தன் ஜனத்திற்காக ஒரு மனிதன் இரவும் பகலும், ஒரு துக்க வீட்டில் பிரியமான தன் பிள்ளையை பறிகொடுத்த ஒரு தாயைப் போல அழுவதற்காக தன் விண்ணப்பத்தை தேவனிடம் வைக்கிறார். உலக மனிதர்களோ தங்கள் வாழ்வையும் தங்கள் செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதற்காக இரவும் பகலும் உழைக்கும் பலத்தை கடவுளிடம் கேட்கிறார்கள். ஆனால் எரேமியாவோ தன் ஜனத்திற்காக அழுகின்ற பெலத்தை தேவனிடம் கேட்கிறார். சரி, எதற்காக அழ வேண்டும்? அழுவதற்கு பதிலாக வேறு ஏதேனும் பயனுள்ள காரியங்களைச் செய்யலாமே என்னும் ஒரு கேள்வி எழுகிறது. அது நியாயமானதும் கூட! ஆனால் உண்மை என்னவென்றால் எதுவுமே செய்ய முடியாமல் காரியங்கள் கைமீறிப்போகும்போது கடவுளிடம் அழுவதினால் வருகின்ற விளைவுகளை எந்த மனிதனும் தன் ஜனத்திற்காக செய்துவிடவே முடியாது! எளிமையாக சொல்வதாக இருந்தால் நம்மால் எதுவுமே செய்ய முடியாது என்ற நிலைமை வரும்போது தேவனை நோக்கி நம்முடைய கண்கள் சொரிகின்ற கண்ணீர் வரவழைக்கும் ஆசீர்வாதங்கள், நாம் எவ்வளவு முயன்றாலும் நம்மால் செய்ய முடியாத பெரிய விளைவாக இருக்கும்! இந்த சூட்சமத்தை புரிந்து கொண்ட தேவனுடைய மனிதர்கள்தான் ஆண்டவருடைய சமுகத்தில் தங்களை அழுவதற்காகவே ஒப்புக்கொடுத்தார்கள்!

எமில் ஜெபசிங் அண்ணன் ஒருமுறை இப்படி எழுதினார்கள்; அதிகாலையிலேயே ஆண்டவருடைய சமுகத்தில் அழுதுவிட்டால் அந்த நாளின் பகல் பொழுதுகளில் வேறு எவரிடமும் அழ வேண்டிய அவசியமே இல்லை என்று! எத்தனை உண்மையான வரிகள் பாருங்கள்! கதவுகள் சாத்தப்பட்ட ஜெப அறைகளுக்குள் கண்ணீர் சிந்த பழகியவர்கள் பொதுவெளியில் கண்கலங்கவே மாட்டார்கள்! அப்படி அவர்கள் கண்கள் கலங்கினாலும் அது ஆனந்த கண்ணீராகத்தான் இருக்க முடியும்!

இந்திய தேசத்தை எட்டிப்பார்க்கும்போது, அதன் உள்ளுக்குள் நடக்கின்ற அநியாயங்களை, அத்துமீறல்களை, அதிகாரத் துஷ்பிரயோகங்களை, ரத்தங்களை, காயங்களை, குமுறல்களை, அபயங்களை கேட்கும்போது வஸ்திரத்தை அல்ல, இருதயத்தையே கிழித்துக்கொள்ள வேண்டியது போல இருக்கின்றது. ஆனால் எந்த உணர்வுமற்ற ஒரு பெருங்கூட்ட கிறிஸ்தவர்கள் – விசுவாசிகள் என்னும் போர்வையில் தங்கள் இதயங்களை உலகத்துக்கு விற்றுவிட்டதினால், உணர்வுகளற்ற – கல்லாகிப் போன துடிக்காத ஒன்றை இதயமாக வைத்திருப்பதை சபைகள் சங்கங்கள்தோறும் இப்போது மிக அதிகமாகப் பார்க்க முடிகிறது. பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும் பிரசங்கித்து விட்டு கீழே வரும்போதே அவர்கள் நம்மை எதிர்க்கிறார்கள். ‘ஹைப்பர் கிரேஸ்’ மற்றும் ‘சூப்பர் ஹைப்பர் கிரேஸ்’ போன்ற நூதன போதனைகளால் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் இருதயங்களுக்கு ஏற்ற

போதனைகளையும் போதகர்களையும் திரளாக சேர்த்துக்கொண்டு சத்தியத்தை சத்தியமாய் பிரசங்கிக்கும் சிறு கூட்டத்தை வலிய எதிர்க்கிறார்கள். விளைவு தேசத்தின் அழிகின்ற ஆத்துமாக்களை குறித்த பாரத்தை இழந்து மிஷனெரிப் பணியை விட்டு தொலைதூரம் போய்விட்ட நிலைமை. ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்ற முச்சந்தியிலேயே மூச்சிரைக்க தங்கள் பலத்தையும் நேரத்தையும் செலவழிக்கும் இவர்கள் ஒருபோதும் ஆத்தும அறுவடைப் பணியை திரும்பிப் பார்ப்பது கூட இல்லை. கடைசி கால நூதன உபதேசங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இல்லை, எல்லா இடத்திலும் பெரும் களையாய் விளைந்து கிடக்கிறது.

இவைகள் எல்லாவற்றையும் பார்க்கும்போது சி.எஸ். லூயிஸ் சொன்ன வார்த்தைகள்தான் நினைவுக்கு வருகின்றன. "சுவிசேஷம் என்பது 2000 வருடம் பழமையானது. அந்தப் பழைய ரசத்தைப் புதிய துருத்திகளில் தாராளமாக பரிமாறலாம். ஆனால் புதிய காரியங்கள் என்று சொல்லப்படுமாயின் அது ரசத்தையே மாற்றுவது". புதிய ரசம் என்று ஒரு கூட்டத்தினரால் அழைக்கப்படும் இப்புதிய உபதேசங்கள் அதைக் கேட்போரின் இதயத்திற்கு இப்போது நஞ்சேற்றியிருக்கின்றன. இப்புதிய நஞ்சை உண்டவர்கள் போதை தலைக்கேறிய குடிகாரர்களைப் போல வேதத்தின் சில வசனங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு அதையே சுற்றி வருவார்கள். தர்க்கங்களுக்கும் சண்டைகளுக்கும் அவர்கள் உதடுகள் துடித்துக் கொண்டே இருக்கும். விசுவாச கூட்டத்திற்குள் சுவிசேஷ ஊழியத்திற்கு பிரதான எதிரிகளாக பிசாசு பயன்படுத்தும் கூட்டம் இவர்கள் தான். சுவிசேஷ ஊழியத்திற்கு இவர்களால் எந்த பலனும் இருக்காது.

77 ஆண்டுகள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக் கொண்டிருக்கும் இந்தத் தேசம் எல்லா வளங்களும் நிலங்களும் இருந்தும் படுக்கையில் இருக்கும் ஒரு குமாரத்தி போல கிடக்கின்றது. அவசரப் பகுதியில் அனுமதிக்கப்பட்டு உயிருக்கு போராடும் ஒரு நோயாளி போல அதன் உள்ளுறுப்புகள் செயலற்றுக் கிடக்கின்றன. இப்போது சமாதானம் சமாதானம் என்று வெற்று வார்த்தைகளை கூறி, இந்தக் குழந்தையைக் கொல்வதற்குக் கூடியிருக்கும் போலிகளிடமிருந்து ஜனமாகிய குமாரத்தியைக் காப்பாற்றுவதும், அவள் உயிர் பிழைக்க தேவையான இரண சிகிச்சை செய்வதும் எரேமியாவைப் போல அழுகிறவர்கள் கரங்களில் மட்டுமே இருக்கிறது.

ஆத்தும பாரத்தினால் அழுது புலம்புகின்ற ஓர் இருதயம் இல்லாமல், இந்தத் தேசத்திற்காகப் புலம்பியழ மனமில்லாமல், எதையோ இலக்காக வைத்துக்கொண்டு தலைதெறிக்க ஓடும் விசுவாசிகளானாலும் ஊழியர்களானாலும், அவர்கள் நாகமானை பின்தொடரும் கேயாசிகளே அல்லாமல், தேவனுடைய மனிதனான எலிசாக்கள் அல்ல! அவர்கள் இஸ்ரவேலை சபிக்க அழைக்கப்பட்ட பிலேயாம்களாக மாறுவார்களே ஒழிய அதன் ஆசீர்வாதத்திற்கு உதவும் எரேமியாக்களாக ஒருபோதும் மாறப்போவதில்லை!

## ஜெபிக்கிறோம் ஜெபியுங்கள்



தென்னிந்தியத் திருச்சபை – திருநெல்வேலி பேராயத்தின் முன்னாள் பேராயர் பேரருட்திரு. S. ஜேசன் தர்மராஜ் அவர்களது துணைவியாரும், S. கைலாசபுரம் சேகரகுருவானவர் Rev. J. சைமன் தர்மராஜ் ஐயா அவர்களது தாயாருமான திருமதி. J. லீதியாள் தர்மராஜ் (வயது 89) அவர்கள் 7.7.2024 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். விஷ்வவாணி ஊழியர்களுக்கும் ஊழியங்களுக்கும், அம்மா அவர்கள் செலுத்திய அன்பும் ஆதரவும் வெகு அதிகம். 'என்றும் கர்த்தாவுடன்' வாழும் இவர்களது பூலோக நாட்களையும் சபை சார்ந்த ஊழியக் காலங்களையும் நன்றியுடன் நினைத்து, தேவனைத் துதிக்கிறோம். பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் சகல ஆறுதலும் தேவனால் உண்டாக ஜெபிக்கிறோம்.

# சர்வ சிருஷ்டிகரே,
## சுவிசேஷத்தினால் உருவாகும் சந்தோஷத்திற்காக ஸ்தோத்திரம்!




பதினொருவர் சேர்ந்த குழுவாக விசாகப்பட்டணம் நோக்கிப் பயணம்செய்தோம். அரக்குப் பகுதியில் அமைந்துள்ள பொடகொண்டி ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யப் பயணித்தோம். விசாகப்பட்டணத்திலிருந்து மலைகளினூடாய்ச் சென்ற ரயில் பயணம் மறக்கமுடியா அனுபவம். பிரிட்டிஷ் காலத்தில் கட்டமைக்கப்பட்ட மலைகளைக் குடைந்த பாதைகள் - சுற்றி நோக்கும் திசையெல்லாம் ஆதி ஏதேனின் செழிப்பை நினைவுபடுத்தின. பள்ளத்தாக்குகள், நீர்வீழ்ச்சி, பசுமையான தேக்கு, யூகலிப்டஸ் மரங்கள் இருமருங்கும் நின்று வரவேற்றன. அரக்கு வந்தடைந்த எங்களை சிறுதுளிகளாய் மழைச் சாரலும் வரவேற்றது.

அரக்குப் பள்ளத்தாக்கிலிருந்து சுமார் இரண்டு மணி நேர ஒடிசா எல்லைகளை ஒட்டிய பணித்தளங்களுக்குப் பயணம் செய்தோம். விஷ்வவாணி ருடகோட்டா தள ஆலயம் தூரத்தில் தென்பட்டது. அதையும் தாண்டி ஓர் மலையடிவாரத்தில் எங்கள் வாகனம் நின்றது. இனி இவ்வகை மகிழ்வுந்து மலைமேல் ஏறுவது கடினம் என ஜீப்பில் மாறிக்கொண்டோம். உலகிலேயே மிக அற்புதமான வாகன ஓட்டிகள் இந்த மலைப் பகுதியின் வாகன ஓட்டிகளே! கரணம் தப்பினால் மரணம் எனும் பாதையில் மிக அழகாக வாகனத்தை ஓட்டிச்சென்றார். வாகனத்தினுள் அமர்ந்த நாங்கள்தான் நடுக்கத்துடன் இருந்தோம். அவ்வளவு ஏற்ற இறக்கங்கள், அவ்வளவு கரடுமுரடான பாதைகள், பற்றாக்குறைக்குக் கால்நடைகள் வேறு எங்களை மறித்தன. சுமார் முக்கால் மணி நேரப் பயணத்திற்குப் பின் பொடகொண்டி வந்தடைந்தோம்.

அக்கிராம மக்களின் இன்முக வரவேற்பு கடினமான பயணத்தை மறக்கச்செய்தது. எங்கள் கால்களைக் கழுவித் துடைத்து, கரம் குலுக்கி வரவேற்ற சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட இளம் விசுவாசிகள் எங்கள் இதயம் கவர்ந்தனர். ஆடலும் பாடலும் ஆண்டவரைத் துதிக்கும் ஆராதனையும் எங்களை முழுமையாகத் தேவப் பிரசன்னத்தில் ஆழ்த்தியது. நானும் எனது மனைவியும் இந்நீண்ட பயணத்தை மேற்கொள்ள முடியுமா என்று நினைத்த நாட்கள் உண்டு. ஆனால் இக்கடின பயணத்தை மேற்கொள்ள பரிசுத்த ஆவியானவரே எங்களுக்குப் பெலன் அளித்தார் என இவ்வழகிய ஆலயத்தைப் பார்த்தபோது உணர்ந்துகொண்டோம்.

30.06.2024 அன்று இடம்பெற்ற இவ்வாலயப் பிரதிஷ்டை எங்கள் வாழ்நாளின் பாக்கியம் எனக் கருதுகிறோம். இப்படிப்பட்ட கருகலான - கண்ணிற்குத் தெரியா இடங்களிலுள்ள குக்கிராமங்களில் சுவிசேஷத்தை அறிவித்து, ஆசீர்வாத நிலையங்களாய் நிலைப்படுத்தும் அன்பு விஷ்வவாணி ஊழியர்களை வாழ்த்துகிறோம். 2030க்குள் ஒரு இலட்சம் கிராமங்களை சுவிசேஷகர்களின் பாதங்கள் சுதந்தரிக்க ஒவ்வொரு நாளும் ஜெபிக்கிறோம். - டேவிட் பாண்டியன் குடும்பத்தார்.

# அன்பின் பகிர்வுகள்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

தேவ வழிநடத்துதலைப் பெற்று, பிரத்யேக பிரயாசங்களெடுக்கும் பணிகளைத் தேவன் அற்புதமாகவே முன்நடத்துகிறார், அளப்பற்கரிய ஆச்சர்யங்கள், அடையாளங்களை அன்றாட ஊழியங்களில் காணச்செய்கிறார். இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளையாகிய 'புறப்பட்டுப் போங்கள்; சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்; ஞானஸ்நானம் கொடுங்கள்; உபதேசம் பண்ணுங்கள்' என்பதில் வெகு பிரயாசம் நாம் எடுக்கத் துவங்கும்போது, இயேசு கூறுகிறார்: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்."

இமயமலைப் பகுதியின் ஆரம்ப கால ஊழியங்களைப் பற்றி கடந்த இதழில் வாசித்த உங்களுக்கு இவ்விதழில் வடகிழக்கின் மேற்கு வங்காள வடபகுதி, சிக்கீம், அசாம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பிராந்திய ஊழியத்தைக் குறித்து எழுத ஏவப் பட்டேன். நேபாளி இனம்சார்ந்த Rev. பிரகாஷ் சேத்ரி இப்பிராந்திய ஒருங்கிணைப் பாளராகவும், மாநில ஒருங்கிணைப்பாளர்களாக Rev. ஜேம்ஸ் லுஷாய் மேற்குவங்க வட பகுதியிலும், Rev. மனோஜ் பிரதான் சிக்கீம் மாநிலத்திலும், Rev. அஜாய் ரபா அசாமிலும் ஊழியங்களைத் தலைமையேற்று நடத்துகின்றனர்.

**களம் கண்ட கனிகள்:**

இம்மாகாணத்தில் 124 பணித்தளங்களில் – 650 கிராமங்களில் வேர்விட்டு வளரும் ஊழியங்கள், நேபாளி, போடோ, ரஜ்பான்ஸி, சந்தாலி, ஒராவன், முண்டாரி, சிக்கீமிஸ், லெப்சா, புட்டியா, அசாமீஸ், பெங்காலி போன்ற இன / மொழியினரின் மறுமலர்ச்சிக்குப் பேருதவிபுரிகிறது. நன்னெறியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் போதிக்க 467 வேதபாடநிலையங்கள், 135 ஆராதனை குழுக்கள் இயங்குவதுடன், 65 அழகிய ஆலயங்களும் கிறிஸ்துவின் மகிமைக்காகக் கட்டப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் 6 ஆலயங்கள் கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டதும் துதிக்கத்தக்கது. திருமுழுக்குபெற்ற 5073 பேருடன் ஆலய ஆராதனையில் பங்கெடுப்போரின் மொத்த எண்ணிக்கை 6605 ஆகும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**இதோ, அடியேன் என்னை அனுப்பும்...**

எங்கள் பிராந்தியக் கிராமங்களில் முழுநேரப் பணிபுரிய நாங்கள் ஆயத்தம் என சிலிகுரி பகுதியில் 30 இளைஞர்களும், சிக்கீமில் 23, அசாமில் 50 பேரும் ஆக 103 பேர் எஸ்றா முகாமிற்கான விண்ணப்பப் படிவம் தந்துள்ளனர். பயிற்சியளித்து, பணியில் இணைக்க உங்கள் ஜெபமும் உதவிக்கரமும் தேவை.

கிறிஸ்து இயேசுவில் நவ ஜீவியம் பெற்ற தள விசுவாசிகள் ஒவ்வொருவரும் பிறிதொரு நபரை அவ்வித அனுபவத்திற்குள் நடத்தவும், நம் தளச் சபைகள் மூலம் அண்டை கிராமங்களில் சபை உருவாகவும், கிறிஸ்துவால் மீட்கப்பட்ட ஒவ்வொரு கிராமமும் மற்ற கிராமங்களைச் சுவிசேஷத்தால் ஆசீர்வதிக்கவும் இவ்விதம் ஒரு லட்சம் கிராமங்களை சுதந்தரிக்க ஒவ்வொரு விசுவாசியும் சுவிசேஷகனாக, சுவிசேஷகியாக செயல்படவேண்டும் எனும் செயல்திட்டம் தந்த தேவன், நிறைவேற்றும் கிருபையை நிச்சயம் அளிப்பார்.

## சமுதாய மேம்பாட்டுப் பணிகள்:

முழுமையான சுவிசேஷப்பணி என்பது, ஜனங்களின் ஆவி, ஆத்துமா, சரீரப் பிரகார மான தேவைகளை ஒருங்கே சந்திப்பது ஆகும். தையற்பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறுவர்களுக்கான மாலை சிறப்புக் கல்வி 2 பணித்தளங்களிலும், பாலர் பராமரிப்பு மையம் மட்டிகராவிலும், திறன்வளர் மையம் கயாகங்காவிலும் இயங்குகிறது. சபை விசுவாசிகளுடன் கிராம ஜனங்களுக்கு உதவும் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களால் தேசத்திற்குப் பயனுள்ள பிரஜைகள் பெருகுகிறார்கள், துதியுங்கள்.

நமது தரிசனத் திட்டப்படி, அசாமில் 4500 கிராமங்கள், சிலிகுரி பகுதியில் 2000 கிராமங்கள், சிக்கீம் மாநிலத்தில் 200 கிராமங்கள் கிறிஸ்துவின் மீட்பின் அனுபவம் பெறவேண்டும்; 2030க்குள் இவ்விடங்களில் சேவைபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை 1340ஆக உயர்ந்து, விசுவாசிகளின் மூலம் திரள் அறுவடை காண வேண்டும். அனுப்பும் கரங்களும், தாங்கும் முழங்கால்களும் இணைந்தால் கிராமங்களில் சுபிட்சம் பெருகிவிடும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சுவிசேஷப் பிரபல்யப் பணியில் மிகவும் பிரியமுள்ளவராய்ச் செயல்படுகிறார்.

இந்திய எல்லையின் கடையோரத்தில், பங்களாதேசத்திற்கு வெகு அருகில் ஜியோரா முனி தள ஊழியங்களை முன்நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம். அதற்கருகிலுள்ள சோட்டா பட்டாமாரி தள விசுவாசிகள் மிக நேர்த்தியான ஆலயத்தைப் பெற்றுள்ளனர். ஜியோரா முனியில் ஆலயம் கட்ட நிலம் வாங்கப்பட்டு, கட்டுமானப்பணி துவங்கியதும் எதிர்ப்பு எழும்பியது. மோட்டார் சைக்கிளில் வந்த 4 வாலிபர்கள் கட்டுமானத்தை நிறுத்தியதோடு, ஆயுதங்களை எடுத்து மிரட்டினார்கள். ஊழியரும் விசுவாசிகளும் ஜெபத்தில் தளரவில்லை, தைரியத்தையும் விடவில்லை; ஆலயக் கட்டடம் உயர்ந்த போது, மீண்டும் அதே நபர்கள் வந்து இடித்தார்கள். விசுவாசிகள் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் அந்நான்கு பேருக்கும் அபராதமும் கைது நடவடிக்கையும் விதிக்கப்பட்டது; அதே வேளையில் கட்டடப்பணியையும் நிறுத்தும்படி கூறினார்கள்.

பணி நின்றாலும் விசுவாசிகளின் ஜெபம் நிற்கவில்லை. சற்றும் எதிர்பாரா வேளையில், தடுத்த அந்நான்கு நபரில் ஒருவரான அருண்தாஸ், விசுவாசிகளிடம் வந்து, ஆலயக் கட்டட வேலையை உடனே துவங்குங்கள்; இனி நாங்கள் எதிர்ப்பதில்லை என்றார். எப்படி இந்தத் திடீர் மாற்றம்? அருண்தாஸின் தூங்கிய அறைக்குள் பிரவேசித்த பிரகாசமான ஒளி – வெள்ளை வஸ்திரத்தில் ஓர் மனிதர் – ஆலய வேலையைத் தடுக்காதே என்ற தொனி! ஆம், கர்த்தராகிய இயேசுவின் சத்தம் பிறந்த அந்நாளில் இருந்து எதிர்ப்புகள் வாய்ப்புகளாக மாறிவிட்டது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு, தேவ மகிமைக்காக பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

மேற்கு வங்காளம் – இமயமலையில் டார்ஜிலிங் என்ற சுற்றுலா மையம் உண்டு. நம் முன்னேற்றப்பணி அலுவலகம் இங்கும் உண்டு. ஜெப மையமும் சிறியதொரு பயிற்சி நிலையமும் எழுப்ப 5 போல், அதாவது, 1320 ச. அடி நிலத்தை முன்குறித்துள்ளோம். போல் ஒன்றுக்கு ரூ. 3.50 லட்சம் ரூ. 17.5 லட்சம் தேவை. தேவையை தெரிவிப்பது தேவ ஊழியர் கடமை; தேவையைச் சந்திக்கும் தேவ ஜனங்களை எழுப்புவது தேவனுடைய பொறுப்பு. ஜெபியுங்கள்; உதாரத்துவ ஈகையினால் ஆதரியுங்கள்.

உங்களது ஜெபம், ஈகை, ஈடுபாடு யாவுக்காகவும் மிகுந்த நன்றிகூறுகிறோம்.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

ஹைதராபாத்
12.07.2024

கர்த்தரின் பணியில் உங்கள் சகோதரன்,
P. செல்வராஜ் Chairman, Vishwa Vani Network

# பின்வாங்குதல் இல்லை

குடியிருப்பு இல்லா கிராமங்கள், எரிக்கப்பட்ட வீடுகள், தகர்க்கப்பட்ட தேவாலயங்கள், கற்குவியல்களாய்ச் சிதறிக்கிடக்கும் ஊழியர்களின் இல்லங்கள், கூடுகளாகி நிற்கும் வாகனங்கள், விசுவாச வீரர்களின் சடலமில்லா சவப்பெட்டிகள் என்று கண்ட இடங்களெல்லாம் கண்களை நனைத்துக் கொண்டும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டும் ஏழு நாட்கள் மணிப்பூரில் ஜெபப் பிரயாணம் எடுத்தோம். 2024 ஜூன் 13 அன்று இம்பாலில் இறங்கி, 19ல் குணோவ் களம் ஏறும் வரை ஜீவனைப் பணயம் வைத்தப் பயணம் தான்.

ஒவ்வொரு முப்பது மீட்டர் இடைவெளியிலும் சோதனைச் சாவடிகள், கிராமங்கள்தோறும் தங்களுக்குத் தாங்களே என்ற தற்காப்புகள், தாய்மண்ணிலேயே அகதிகளாகி, தார்பாலின் கூடாரங்களுக்குள் சுமார் இருபதாயிரம் ஜனங்கள், இரத்தச் சாட்சிகளின் கல்லறை மைதானங்கள் என்று நெஞ்சை உறைய வைத்த காட்சிகளும், ஆங்காங்கே திடீர் திடீரென வெடிக்கும் சத்தங்களும், ஜன சதளங்கள் இன்றளவும் பதஷ்டங்களுக்குள் இருப்பதையே கண்முன் நிறுத்தியது.

“**குண்டு** சத்தங்கள் கேட்கும்போதெல்லாம், ஊர் ஜனங்கள் ஓடி ஒளிந்துகொள்வார்கள்; என் 88 வயது தகப்பனாரை என் முதுகில் சுமந்துகொண்டு அருகிலுள்ள காடுகளுக்குள் வைத்துக் காப்பாற்றிவருகிறேன். ஊழியத்தினிமித்தம் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது என் வயோதிப தகப்பனார் கட்டில் அடியில் ஒளிந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வார். ஆயினும் தேவனாலேயே பிழைத்திருக்கிறோம்.” - ஊழியர் ரொய்முதாங் என்பாரின் உள்ளமுடைக்கும் சாட்சியிது.

“**ஒருமாத** காலமாக என் கிராமத்திற்குள்ளேயே என்னால் செல்லமுடியவில்லை. அச்சுறுத்துதல்கள், அசம்பாவிதங்கள் இன்னும் அகலவில்லை” - ஊழியர் ரொமேஷ் சிங் கொடுத்த ஜெபக்குறிப்பு இது.

“**எங்கள்** வீட்டில் இயேசுவை அறிந்தவர்கள் என்னைத் தவிர ஒருவரும் இல்லை; எங்கள் வீட்டில் கூடும் வேதபாட வகுப்பில் பங்கெடுக்கும் விசுவாசிகளின் எண்ணிக்கை கலவரங்களுக்குப் பின் குறையவுமில்லை” - ரோஜத் மொய்பான் எனும் இளம் வாலிபரின் துதிக்குறிப்பு.

“**ஆலயம்** இல்லைதான்; ஆலயம் இருந்த இடத்தைக் காணும்போதெல்லாம் எங்கள் கண்கள் நனைவதும் உண்மைதான். ஆயினும் நாள் ஒன்று வரும். இடிபாட்டில் இழந்ததைவிட நேர்த்தியான ஆலயம் ஒன்றை இயேசுதாமே தருவார்” - கெய்னோவ் விசுவாசிகளின் இதயம் விளம்பிய விசுவாச அறிக்கை இது.

“**எங்கள்** கிராமத்தில் கிறிஸ்துவின் நாமத்தின்பேரில் விசுவாசமுள்ளவர்கள் 35 பேர்; ஆராதனை நாளில் 60க்கும் அதிகமானோர் ஆர்வத்தோடு கூடுகிறார்கள்; வீட்டு வராண்டாவில் இடமில்லை; 3500 ச.அடி நிலம் ஆயத்தமாயிருக்கிறது; அதனை வாங்கவும் ஆலயம் எழுப்பவும் தமிழகத்தில் விசுவாசிகளை எழுப்புங்கள்”. - கெய்னோபொக் தள இளம் விசுவாசிகளின் ஏக்கம் இது.

“**இருந்ததை** எல்லாம் இழந்தோம், ஆனால் இருதயத்துள் இருக்கும் விசுவாசத்தை இழக்கவே இல்லை; இயேசுவை விட்டு பின்வாங்குதல் என்ற வார்த்தைக்குக்கூட இடம் இல்லை.” - தளம் கண்ட கனிகளின் இதய வரிகள்.

200 குடும்பங்களுக்கு 4ம் கட்ட நிவாரண உதவிகளை நிறைவேற்றி முடித்திருக்கிறோம். இன்னும் பல்லாயிர ஜனங்களின் துயர் துடைக்கும் பணியில் - பரிசுத்த வேதாகமங்கள் அவர்கள் கரங்களில் அளிக்கும் உயரிய பணியில் தேவ ஒத்தாசையுடன் தீவிரமாய் உழைக்கிறோம். மணிப்பூரின் சமாதானத்திற்காக ஜெபிப்போர் பாக்கியசாலிகள். உயிர், உடைமை, உறைவிடம் இழந்தும் இயேசுவில் திட விசுவாசம் காக்கும் விசுவாசத் திரளுக்காக - ஊழியர் குடும்பங்களுக்காக இயன்றதைச் செய்தோரும், செய்வோரும் மெய்ப்பாக்கியசாலிகள். - **கிங்ஸ்லி, இணை இயக்குநர்.**




## வளர்ச்சியும் மறுமலர்ச்சியும்



பாவ சாப ஆதிக்கங்களுக்குள் சிக்குண்டு, விமோசனம் - விடுதலை - வெளிச்சத்திற்காய் பெருமூச்சுகளுடன் அங்கலாய்க்கும் கூட்டம் மிகுதியும் பெருகும் இந்நாட்களில், சுவிசேஷம் எனும் ஜீவ ஒளியினால் பிரகாசம்பெற்று களிகூரும் கூட்டமும் கர்த்தரால் பெருகுகிறது, ஸ்தோத்திரம். உத்தரப்பிரதேசத்தின் 512 கிராமங்களில் - 199 ஆராதனைக் குழுக்களில் தேவ வசனங்களால் ஜீவன் பெற்ற ஆத்துமாக்கள் ஆராதனையில் மட்டுமன்றி, சமுதாய மறுமலர்ச்சிக்கான அத்யாவசிய சேவையிலும் அக்கறை செலுத்துகின்றன.

23 ஆசிரிய ஆசிரியைகளைக் கொண்டு, 7 பணி மையங்களில் 597 சிறுவர் சிறுமியர்க்கென நடத்தப்பட்ட நன்னெறி வகுப்புகளில் பிஞ்சு உள்ளங்கள் பாவ நஞ்சுகளுக்கு வெறுப்பு தெரிவித்தன. தளத்திருச்சபைகளில் மூப்பர்களுடன் சிறுகுழுத் தலைவர்களும் கூடி ஜெபித்து, பணி வளர்ச்சிக்காய் - கிராம மறுமலர்ச்சிக்காய் ஆலோசிப்பது, ஆராதனை குழுதோறும் அதிகரித்துள்ளது. பெண்களுக்கானப் பிரத்யேக கைத்தொழில்கள், சமுதாய அபிவிருத்தி சேவைகள், மக்கள் நல மையங்களின் செயல்திட்டங்கள், அதன் அன்றாட செயல்பாடுகள் ஆகியவற்றை தரிசனக் கண்களுடன் காண்கையில், கர்த்தர் கிராமங்கள் தோறும் தமது காரியங்களை வல்லமையாய் நடப்பிக்கிறார் என்பதே காட்சிப்புலனாகுகிறது. ஜனங்களின் ஆவி, ஆத்துமா, சரீரப் பிரகாரமான அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட்டு, சுபிட்சத்தில் கிராமங்கள் தழைக்கவேண்டும் என்பதே நம் பணியின் தரிசனம். போஜ்புரி பிராந்தியத்தில் சேவை செய்வதற்கு 16 வாலிபர்கள் முன்வந்துள்ளனர். அனுப்பி ஆதரிக்கும் “அந்தியோகிய விசுவாசிகள்” தேவை, ஜெபியுங்கள். - அனில்குமார், ஒருங்கிணைப்பாளர்.

## 2023-2024
## பணியின் தணிக்கை அறிக்கை

# அறுவடையின் எஜமானருக்கு ஆயிரம் ஸ்தோத்திரங்கள்!

**பரலோகத்தின் தேவனைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.**
**சங். 136:23**

2023 ஏப்ரல் துவங்கி, 2024 மார்ச் மாதம் நிறைவடைந்த நிதியாண்டின் பணி விபரங்களை இயேசுவின் மகிமைக்காகப் பணிப்பங்காளர்களுக்கு எழுதி சமர்ப்பிப்பதில் கர்த்தருக்குள் அகம் மகிழ்கிறோம். "அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்ய வேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம்" (லூக்கா 17:10) என்ற ஜீவ வசனத்தை வெகு மனத்தாழ்மையுடனும் பணிந்த சிந்தையோடும் அறிக்கை செய்கிறோம்.

சிலுவையில் அடிக்கப்பட்ட ஜீவ இரட்சகரின் தெய்வீக அன்பை அப்புறமான கிராமங்களுக்கும், சொல்லப்பட்டிராத இந்திய மக்களினங்களுக்கும் அறிவித்துவரும் விஷ்வவாணி பணியை 1980 துவக்கம் முன்நடத்தும் கர்த்தர் நல்லவர்; "செல்லுவோர் சுதேச ஊழியர்கள்; செலுத்துவோர் இந்திய விசுவாசிகள்" எனும் ஆதிநாள் அர்ப்பணத்தில் இந்நாள்வரை நடத்துபவரும் அவர் ஒருவரே. தேவ தயாளத்தினாலும், தேவ பிள்ளைகளின் ஜெபம் – தர்ம சகாயம் – தன்னார்வப் பிரதிநிதிகளின் பெரும் பிரயாசத்தினாலும் கடந்த நிதியாண்டின் பணிகள் கனிகளுக்குமேல் கனிகள் கண்டன.

2023-2024ன் 12 மாதங்களில், 13 புதிய மாவட்டங்களில் சுவிசேஷப் பணிகள் துவக்கம் பெற்றதும், 224 கிராமங்களுக்குப் புதிய ஊழியர்களை அனுப்பிவைத்ததும் தேவனளித்த கிருபையே. கர்த்தரின் ஜனங்கள் இக்கனமான ஊழியத்திற்குக் கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 7% கூடுதலாக அளித்த அன்பின் ஈகையின் பிரதிபலிப்பை புதிய ஊழியர் பயிற்சியிலும், தளங்கள் பிறப்பித்த 102 புதிய ஆராதனை குழுவிலும் பரிசுத்த ஆவியானவர்தாமே காணச்செய்தார். முதல் தலைமுறை விசுவாசிகள் என்னப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,38,751ஐ தளங்களில் எட்டியது; 85 பணித் தளங்களில் கட்டப்பட்ட புத்தாலயங்கள் பிரதிஷ்டை ஆராதனைகளை அநுசரித்ததும், மேலும் 137 கிராமங்களில் தேவாலயக் கட்டுமானப்பணிகள் இடம்பெறுவதும் அறுவடையின் எஜமானராலேயே ஆயிற்று.

கடந்த நிதியாண்டில் விஷ்வவாணி ஊழியத்திற்குப் பணிப்பங்காளர்கள் அளித்த ஈகை ரூ. 75,42,53,201/- ஆகும். முழங்கால்களில் தாங்கும் ஜெபக்குழுக்கள், சேமிப்புப்பெட்டியாளர்கள், ஊழியக் கிராமத் தத்தெடுப்பாளர்கள், அன்புப் பிரதிநிதிகள், தள ஆலயம் கட்டுவதற்கு ஆர்வத்தோடு வழங்கிய விசுவாசக் குடும்பங்களை வாழ்த்தி, நன்றிகூறுகின்றோம். மகா கனத்திற்குரிய பேராயர்கள், மதிப்பிற்குரிய போதகர்கள், குருமார்கள், சபை விசுவாசிகள், விரிவாக்கப்பணியின் அன்புச் சகோதரர்களை மனதார வாழ்த்துகிறோம்.

அன்பிற்குரியவர்களே, கண்ணீரோடே விதைக்கிறவர்களும், கெம்பீரத்தோடே அறுக்கிறவர்களும் ஏகமாய்ப் பெருகும் இப்பணியில், இந்தியாவில் எப்பகுதியில் நீங்கள் வாழ்ந்தாலும் கிராமங்களைச் சுதந்தரிப்போர் வரிசையில் நிற்பதற்கு உங்களை பணிவன்புடன் வரவேற்கிறோம். இணைந்துகொள்ளுங்கள், இயேசு இராஜாவின் இராஜ்யம் வளர்ந்து பெருகுவதாக.

Rev. Dr. வில்சன் ஞானக்குமார்
Executive Director

P. செல்வராஜ்
Chairman, Vishwa Vani Network

# கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்

- அருள்திரு. இம்மானுவேல் ஞானராஜ், இயக்குநர் ஜெப ஒருங்கிணைப்பு

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபம் 1:16ல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படேன் என்கிறார். அதன் காரணத்தையும் அந்த வசனத்தில் தானே: முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவ பெலனாயிருக்கிறது என்று விளக்கமாகக் கூறுகிறார். இந்த வசனத்தைச் சிந்திக்க முற்படும்போது, முதலாவது, வெட்கம் என்றால் என்ன? என்றும், அதன் விளைவு என்ன? என்றும் சற்று பார்க்கவேண்டும். வெட்கம் என்ற பதத்தையொட்டி, நாணம், கூச்சம் என்ற பதங்கள் வருகின்றன. உடலில் தோன்றும் உணர்ச்சிக்கு கூச்சம் என்றும், அதோடு மனத்தில் தோன்றும் உணர்ச்சிக்கு நாணம் - வெட்கம் என்றும் அகராதியில் அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. வெட்கம் என்ற மனநிலை ஒன்றை அணுகமுடியாமல், துணிவு இழக்கச் செய்கிறது. ஒருவித பய உணர்வை அது கொடுப்பதினால் பக்கமாக விலகிப்போன ஆசாரியனைப் போலவும், லேவியனைப் போலவும் கள்ளர்களால் தாக்கப்பட்டு துடித்துக்கொண்டிருப்பவனுக்கு உதவ பரிதாப உணர்வு பொங்கினாலும் அதை அடக்கிக்கொண்டு அதில் தலையிடாமல், எந்தப் பொறுப்பும் எடுக்க முன்வராமல், கண்டும் காணாததுபோல விலகிச் செல்கிறான். அதுதான் வெட்கப்படுதல் ஆகும்.

அப்படிப் பொறுப்பெடுக்க விரும்பாமல் வெட்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று பாதிக்கப்பட்டு தேவையோடிருப்பவர்களின் தேவையை உணரமுடியாத மனம். அதாவது பாவப் பிடியில் சிக்கித் தவிக்கும் மனிதனிடம், “இயேசு உன் பாவத்துக்காக பிராயச்சித்தம் செய்துவிட்டார். அவர் உன்னை இரட்சிப்பார்” என்று கூறும் முன் அந்தப் பாவத்தின் பிடியிலிருந்து இயேசு தரும் விடுதலையை அறிந்திருக்கவேண்டும், அனுபவித்திருக்கவேண்டும். பாவமன்னிப்பு பெறாதவனின் நிலை என்னவாகும் என்ற உண்மை தெரிந்திருக்கவேண்டும். தொடர்ந்து, மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டாகும் சந்தோஷத்தைக் குறித்த அறிவு உண்டாயிருக்கவேண்டும். விபத்தில் சிக்கிக் கிடப்பவனைக் காப்பாற்ற நான் என் நேரத்தையும், பணத்தையும் செலவுசெய்வது, லாபமா நஷ்டமா என்ற கணக்கீடு புரிந்திருக்கவேண்டும். இந்த உணர்வு இல்லாமல் வாழும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பக்கமாய் விலகிச்செல்லும், தலையிடாமல் தப்பிக்கொள்ள விரும்பும் மனிதர்களே. அவர்கள் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படுபவர்கள். ஆனால் பவுல் ‘‘நான் வெட்கப்படேன்’’, ‘‘நான் மேன்மை பாராட்டுவேன்”, “அது என்மேல் விழுந்த கடமை” என்ற பதங்களைப் பயன்படுத்துகிறார்.

**அ) எதைக்குறித்து வெட்கப்படமாட்டேன்:** முதலாவது சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் என்று ரோமர் 1:16ல் கூறுகிறார். ஏன் வெட்கப்படமாட்டேன் என்ற விபரத்தையும் அங்கு கூறுவதைப் பாருங்கள். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமானது தேவ பெலனாயிருக்கிறது என்கிறார். சுவிசேஷமானது விசுவாசிப்பவர்கள் வாழ்க்கையில் பாவத்திலிருந்து விடுதலையையும், பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பரிசுத்த வாழ்க்கையின் தொடக்கத்தையும் (1யோவான் 1:9; யோவான் 5:24; ரோ. 6:22) இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் வாழ்க்கையில் தேவ பிள்ளை என்ற அதிகாரத்தையும் (யோவான் 1:12) கொடுத்துவிடுகிறது. ஆகையினால் இந்தச் சுவிசேஷத்தை படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் அறிவிக்க நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்று ரோமர் 1:14,15ல் கூறுகிறார்.

**ஆ) எதைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்:** வெட்கப்படமாட்டேன் என்றால், அதைக் குறித்து மேன்மைபாராட்டுவேன், உயர்த்திப் பிடிப்பேன், அதை என் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கருதுவேன் என்பதாகும். அதற்காக எதைவேண்டுமானாலும்

செய்வேன் என்று கூறலாம். நான் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுகிறேன் என்று கலாத்தியர் 6:14ல் பவுல் கூறுகிறார். ஏனென்றால் நம் ஆண்டவர் தம் இரத்தம் சிந்தி நமது மீட்பைச் சம்பாதித்தார்.

நான் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுகிறேன் என்று பல இடங்களில் குறிப்பிடும் பவுல் தன்னைக் குறித்துக் குறிப்பிடும்போது என் பெலவீனத்தைக் குறித்தே பெருமைப்பட்டுக்கொள்வேன் என்று கூறுகிறார். அதுமட்டுமல்ல, சுவிசேஷத்தினிமித்தம் தனக்கு வந்த நிந்தைகளைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் என்று சுவிசேஷத்திற்காகத் தான் பட்ட சரீரப் பாடுகளை - உபத்திரவங்களை 2கொரி. 11:17 முதல் 12:10 வரை பட்டியலிட்டு விவரிப்பதைப் பாருங்கள். கிறிஸ்துவுக்காக, சுவிசேஷத்திற்காக நான் பட்ட பாடுகளைக் குறித்து நான் வெட்கப்படுவதில்லை. ஆனால் அதில் பெருமைப்படுகிறேன் என்று பவுல் கூறுவதின் தாக்கத்தை நம் வாழ்க்கையில் உள்வாங்க முடிகிறதா? இவ்வளவு பாடுகளையும் பவுல் மட்டும்தான் படவேண்டுமா? நமக்கு இதிலே பங்கு இல்லையா?

**இ) எது 'என்மேல் விழுந்த கடமை':** சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை என்று 1 கொரி. 9:16ல் தொடங்கும் பவுல் அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது என்று கூறுவது மட்டுமல்ல, இயேசுவின் சுவிசேஷத்தை நான் அறிவிக்காமலிருந்தால் எனக்கு ஐயோ, நான் குற்றவாளி என்கிறார். ஆகையினால் நான் அதை உற்சாகமாகச் செய்கிறேன் என்று கூறுகிறார். அதாவது, சுவிசேஷத்தை நான் அறிவித்துத்தான் ஆகவேண்டும். ஒவ்வொரு தேவ பிள்ளையும் அதற்கு உடன்பட்டுத்தான் ஆகவேண்டும். அது கடமை. முதலாவது இந்த இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒவ்வொரு மனிதனும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். இல்லையென்றால் அது மடமை. ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாத எந்தவொரு மனிதனும், அவன் எவ்வளவு பணம் படைத்த, புகழ் படைத்த மனிதனாக இருந்தாலும் தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று என்று இயேசுதாமே யோவான் 3:18ல் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆகையினால் மனிதன் இரட்சிக்கப்பட இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை (அப். 4:12) என்று அறிந்த நான் அதை அறிவிப்பது என்மேல் விழுந்த கடமை அல்லவா!

**ஈ) தீங்கு அனுபவி:** நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய் தீங்கநுபவி என்கிறார் பவுல் (2 தீமோ. 2:3). சுவிசேஷப் பணியில் பங்குகொள்ளுவதன் விளைவாக சில நஷ்டங்கள் வரலாம்; சில நேரங்களில் ஆசைப்படும் பொருள் வாங்க சேமித்த பணத்தை ஊழியங்களின் அவசரத் தேவைகளுக்கு எடுத்துக் கொடுத்ததன் விளைவாக உன் ஆசைகள் நிறைவேறாமல் போகலாம். மக்கெதோனியா சபையார் எவ்வளவு ஆர்வத்துடன் சுவிசேஷப் பணியில் உடன்பட்டார்கள் என்று 2 கொரி. 8ம் அதிகாரத்தில் பவுல் குறிப்பிடுவதைப் பாருங்கள். கர்த்தருக்காக நீ கொடுப்பது உன்னைப் பாதிக்கும் அளவுக்கு இருக்கவேண்டும் என்று ஒரு பக்தன் கூறுகிறார். இங்கிலாந்து தேசத்தில் அரமனை போன்ற தன் வீட்டை விற்று ஊழியத்திற்குக் கொடுத்துவிட்டு சீனாவிலும், இந்தியாவிலும் கடைசியாக ஆப்பிரிக்காவிலும் சுவிசேஷப் பணி செய்த சி.டி.ஸ்டட் என்ற தேவ மனிதன், திருமணமாகி முதல் முறையாக தகப்பனிடம் வந்த தன் மகள் மருமகனுக்குக் கொடுத்து வழியனுப்ப ஒன்றுமில்லாது வெறுங்கையனாய் நின்றாரே. அவர் கிறிஸ்துவுக்காய் சுவிசேஷத்திற்காய் இழந்தது அவருக்கு நஷ்டமாய்த் தோன்றவில்லையே. அது அவருடைய அர்ப்பணிப்புக்கு இன்றும் பெருமை சேர்க்கின்றதே. இங்கிலாந்தில் பிறந்து இந்தியாவிற்கு குடும்பமாக வந்து பல மொழிகளிலே வேதப் புத்தகத்தை மொழிபெயர்த்த மாபெரும் மனிதர் வில்லியம் கேரி சுவிசேஷத்தினிமித்தம் பட்ட பாடுகள், நிந்தைகள், வேதனைகளைப் பட்டியலிட

முடியுமா? அவர்தம் மனைவியையும் பிள்ளையையும் அடக்கம்செய்ய தன் சொந்தக் கையினால் சவக்குழி தோண்டிய வேதனையைச் சொல்லிமுடியுமா? அவை அவருடைய வாழ்க்கைக்கு அவமானத்தையல்ல, புகழையல்லவா சேர்த்தது. ஆம், கிறிஸ்துவுக்காக இழந்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை, ராஜ்ஜிய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்டதில்லை என்பது உண்மையல்லவா! ஆஸ்திரேலியாவிலே பிறந்து ஒடிசாவிலே குஷ்டரோகிகள் மத்தியில் ஊழியம் செய்த கிரகாம் ஸ்டெயின்ஸ் தனது இரண்டு மகன்களோடு தீக்கொளுத்தப்பட்டது அவருக்கு நஷ்டமாயிற்றா?

**ஏன் தீங்கு அநுபவிக்கவேண்டும்?** இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை (எபி. 9:22). விலைக்கிரயம் செலுத்தாமல் மீட்பு சம்பாதிக்கப்படவில்லை. கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன் என்று பவுல் கொலோசெயர் 1:24ல் கூறுவதன் பொருள் என்ன? மனுக்குல இரட்சிப்பின் பணியில் அதாவது சுவிசேஷப் பணியில் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய விலைக்கிரயம் இருக்கிறது. இந்திய தேசம் இயேசுவை அறிவதற்கு ஆண்டவராகிய இயேசு உன்னுடைய வாழ்க்கையில் என்ன அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறார்? சற்று சிந்திப்பார்.

சுவிசேஷப் பணி என் வாழ்க்கையில் எதிர்பார்த்த விலைக்கிரயத்தில் இதுவும் ஒன்று: 1992ம் ஆண்டு முதன்முறையாக விஷ்வவாணியின் ஹிந்தி ஊழியர் பயிற்சி டில்லியில் தொடங்கப்பட்டது. தொடக்க விழாவிற்கு ஜம்முவிலிருந்து நான் டில்லி வந்தேன். வரும் வழியில் அம்பாலா என்ற இடத்தில் என்னுடைய இடமாற்றத்தின் வீடு ஒன்று பார்த்து அட்வான்ஸ் கொடுத்துவிட்டு டில்லி வந்தேன். துவக்கவிழா முடிந்தது, எமில் அண்ணன் என்னிடம் வந்து தம்பி நீங்கள் செல்லமுடியாது, இங்கே இருந்து இந்தப் பயிற்சியைப் பொறுப்பெடுக்கவேண்டும், வேறே வழி இல்லை என்றார்கள், இருந்துவிட்டேன். என் குடும்பம் டில்லி வந்து சேர்ந்தது. பிள்ளைகள் படிக்கத் தொடங்கினார்கள். பயிற்சி நிலையம் கோரக்பூருக்கு மாற்றப்பட்டது. மூன்று மாதத்தில் மீண்டும் குடும்பத்தை டில்லியிலிருந்து கோரக்பூருக்கு மாற்றவேண்டிய கட்டாயம்; கீழ்ப்படிந்தோம். அன்று என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நான் சொன்னது- சுவிசேஷத்திற்காக என்னையும், குடும்பத்தையும், பிள்ளைகள் படிப்பையும் பணயம் வைக்கிறேன் என்பது தான். பிள்ளைகளின் படிப்பில் சில பாதிப்புகள் இருந்தாலும், இன்று திரும்பிப் பார்க்கும் போது, வட இந்தியாவில் மாபெரும் அறுவடை, ஆயிரம் ஊழியர்கள், ஆயிரமாயிரம் ஆத்துமாக்கள்; வெட்கப்பட்டுப் போகவில்லை, ஊழியம் வெட்கப்படுத்தவில்லை.

இரு கிட்னியும் பாதிக்கப்பட்டு, இரு கண்களையும் இழந்த தேவமனிதர் மோசஸ் ராஜசேகர், ஒரு மேடையில் என் கண்முன் பாடிய பாடல் என்னை இன்றும் உலுக்கு கிறது: 'கிறிஸ்துவுக்காக, இயேசுவுக்காக, ஜீவன் தந்த தெய்வத்துக்காக, ஏதாவது ஒன்று செய்திட என் மனம் துடிக்குதே' என்ற துடிப்பு இரு கண்களும் இழந்தவருக்கு இருக்குமானால், இன்று இயேசுவுக்காக எதை இழக்க நாம் ஆயத்தம்? சுவிசேஷத்திற்காக எதைப் பணயம் வைக்க ஆயத்தம்? உன் இதயம் துடிக்கவில்லையா? ■

## ஜெபித்து அனுப்பியவர்களுக்கு நன்றி



குஜராத்தில் வசாவா ஜனங்கள் வசிக்கும் ஹாந்தி பணித்தளத்தின் சுவிசேஷ வேலைக்காய் 22.06.2024 அன்று வசாவா ஊழியரை அர்ப்பணித்து அனுப்பிவைத்த கொடைக்கானல் CSI கிறிஸ்து அரசர் ஆலயப் போதகர் Rev. J. ஜெகதீஷ் கிருபாகரன் அவர்களுக்கும், Rev. K. வேதமுத்து, Rev. அஜய் நிர்மல், Rev.A. பிரசாத், Rev. பிரசாந்த் ஆகிய போதகர்கள் மற்றும் உதவி ஆயர் திரு. ஜான்சன் ஆகியோருக்கும் ஊழியரைத் தாங்கும் விசுவாசக் குடும்பங்களுக்கும் அதிக நன்றிகூறுகிறோம். அறியப்படாத கிராமங்கள் கர்த்தரைக் காணும் தரிசனத்தில் இணைந்து செயல்படும் தேவ ஜனங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். — ஒருங்கிணைப்பாளர் ஜேசுதாஸ் துரைசிங்.

# நவபாடாவில் நவமான நன்மைகள்



சென்னை - கோடம்பாக்கம் பகுதியிலிருந்து குஜராத் மாநில ஊழிய வளர்ச்சியைக் காண 2007ம் ஆண்டு பணிப்பங்காளர்கள் ஜெபத்துடன் விரைந்தனர். அன்று பாட்டடி என்ற கிராமத்தில் கட்டப்பட்டிருந்த ஆலய மங்கலப் படைப்பில் பங்குகொண்டவர்கள் மதிய உணவு வேளையில், அங்குள்ள மக்களினங்களை உயர்த்த ஆங்கிலப் பள்ளி தேவை என உணர்ந்து ஜெபித்தனர்.

அதன் விளைவாக 2009ம் வருடம் நவபாடா என்ற பணித்தள ஆலய வளாகத்தில் ஆங்கிலப்பள்ளி துவங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, 34 குழந்தைகளுடன் துவங்கியது. தொடர் ஜெபத்தின் மூலமும், திட்டமிட்ட தேவபிள்ளைகளின் பெரும் பிரயாசத்தின் மூலமும் நிலம் வாங்கப்பெற்று, கட்டட வேலைகள் தேவாசீர்வாதத்துடன் தொடரப்பட்டதுடன் மாணவர்களின் எண்ணிக்கையும் வளர்ந்தது. 12ம் வகுப்பு வரை பள்ளி இயங்க அரசாங்க அனுமதி பெற்றதும் தேவ அனுக்கிரகமே. ஜெபித்த உள்ளங்கள் அதிகரிக்க, இன்று சுமார் 400 பேர் பயிலத் தக்கதாகவும், கடந்த 3 ஆண்டில் 12ம் வகுப்பு தேர்ச்சிபெற்று கல்லூரியில் இணைந்தோர் பல துறைகளில் உயர்கல்விபெற்று, இப்பள்ளியின் வளர்ச்சிக்காக ஜெபிக்கின்றனர், பிறரையும் உற்சாகப்படுத்துகின்றனர். அவர்கள் உயர நாம் ஜெபிப்போம். இவர்களை உயர்நிலைக்குக் கொண்டுசெல்ல மிகுந்த கரிசனையுடன் செயல்படும் பள்ளி முதல்வர் திரு. மேக்ஸ் வள்ளிவேல் அவர்களுடன் ஜெபத்துடன் முயற்சிக்கும் 27 பள்ளி ஊழியர்கள் உண்டு. தேவன் அவர்களின் பிரயாசங்களுக்குப் பிரதிபலன் அளிக்க நாம் ஜெபிப்போம்.

இக்கால கல்வித் தரத்தின்படியும், கணினி மூலம் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற கல்வித்துறை எதிர்பார்ப்பின்படியும் கம்ப்யூட்டர் ஆய்வகம் அகத்தியத் தேவையாய் இருந்தது. சென்னை தாம்பரம் பகுதியில் உள்ள விசுவாசிகளின் ஈகையினால் 12 கணினிகளை வாங்கவும், ஆய்வகம் அமைக்கவும் எடுத்த முயற்சிகள் ஜெபத்தினால் சாத்தியமானது. இன்னும் தேவைகளுக்குக் கரம் கொடுக்கும் கர்த்தரின் பிள்ளைகள் தேவை. ஜுன் 21 அன்று பாளையங்கோட்டையிலிருந்து இங்கு வருகை தந்திருந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் டாக்டர். கருணாகரன் அவர்கள் முன்னிலையில் ஆய்வகம் ஜெபித்து ஆரம்பிக்கப்பட்டது. படிப்பில் தாமதமின்றி செயல்பட ஜுன் மாதம் 23ம் தேதி முதல் 30ம் தேதி வரை பிரத்யேகப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. தேவன்தாமே அவர்கள் ஊழியத்தை இன்னும் சிறப்பிக்கச் செய்வாராக. மக்களினங்களைச் சார்ந்த மாணவர்களைத் தேசத்தின் சிறந்த பிரஜையாக நிறுத்தும் இப்பள்ளியின் வளர்ச்சிக்காகவும் மாநிலத்தில் சிறந்ததோர் பள்ளியாக உயரவும், தொடர் ஜெபங்கள் தேவை! இன்னும் இப்பள்ளிக்கான இக்கால தர மேம்பாட்டிற்கும் சார்பு தேவைகளுக்கும் உதவும் தேவ ஜனங்களை ஜெபத்துடன் எதிர்பார்க்கிறோம். கொடுக்கும் உள்ளங்களை வாழ்த்தி வரவேற்கிறோம். - பயணக்குழுவுடன் சி.எஸ்.ஆர். பிரேம் குமார், தாம்பரம்.

பள்ளிக்கான உதவிக்கும் ஊழியத் தகவல்களுக்கும் தொடர்புகொள்ளுங்கள்:

94442-42661, 96385-82276






**ஸ்தோத்திரமும் வேண்டுதலும்**

**பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும்.**
எண்ணாகமம் 14:21

**01 ஜம்மு காஷ்மீர்** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 361**

இயேசுவின் நாமத்தில் விசுவாசம் வைத்துள்ள 5 புதிய குடும்பங்கள் ரிடியன் கிராம விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்துள்ளனர். கர்த்தரின் பணிக்கு எதிர்நின்ற கரம்சந்தின் மனம் சுவிசேஷத்தினால் மறுரூபமானது. பௌந்தரியா, ஜஸ்வான் ஆகிய இடங்களில் தேவ வசனங்கள் செல்லும் வாசலைத் தேவன் திறந்துள்ளார். ஊழியர் சஞ்சய் பகத் குடும்பத்தைக் கர்த்தர் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதித்தார்.

கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்த நால்வரது ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... தண்டா தள சிறுவர் பள்ளியில் பங்கேற்போரின் வருங்காலங் களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க... ககோர் ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட... வேத வசனங்களுக்குச் செவிசாய்க்கும் தரம்குந்த் பகுதி ஜனங்களின் ஆத்தும இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**02 இமாச்சலப் பிரதேசம்** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 711**

பரோட் கிராமத்தின் இரவுக்கூட்டம் 4 ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தியது. இயேசுவில் பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்ற 8 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். பணித்தள சர்வே மூலம் 15 புதிய கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 42 பணித்தளங்களைச் சார்ந்த 140 கிராமங்களில் தேடுவோர் முகாம்கள் இடம்பெற்றன; புதிய தொடர்புகளை ஊழியங்களுக்குத் தந்தன, துதியுங்கள்.

ஊழியர் குருதேவ் கிட்னி சம்பந்தமான வியாதியினால் அவதியுறுகிறார்... முழுநேர ஊழியம் செய்வதற்கு 10 இளைஞர்கள் அர்ப்பணித்து முன்வந்துள்ளனர்... கர்த்தரின் வசனங்கள் அறிவிக்கப்படும் 223 கிராமங்களிலும் முப்பது, அறுபது, நூறெனப் பலன் கிடைக்க... கெத்தா, பாங்ரான் ஆகிய தளச் சபையார் மூலம் சுற்றுப்புறக் கிராமங்கள் சுவிசேஷ வெளிச்சம் பெற ஜெபியுங்கள்.

**03 பஞ்சாப்** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 442**

தேவ நடத்துதலினால் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தோர் எண்ணிக்கை 100ஐ எட்டியது. ஊழியர் நரேந்தர் ஹர்பாலின் சிறுநீரக வியாதியைக் கர்த்தர் குணமாக்கினார். கோட்லசஹியா கிராமத்தில் 10 வருடங்களுக்குப் பின் கர்ப்பத்தின் கனிபெற்ற ரேகா குடும்பம் இயேசுவுக்குச் சாட்சிபகருகின்றது. சுவிசேஷம் கேட்ட இளைஞர்களுள் 20 பேர் பாவ அறிக்கைசெய்து, கிறிஸ்துவில் வளருகின்றனர், துதியுங்கள்.

10 கிராமங்களில் இடம்பெறவுள்ள விசுவாச அறிக்கை ஆராதனைக்கான ஆயத்தங் களுக்காக... 45 இடங்களில் நிறைவடைந்த இரவுக் கூட்டங்களின் பின்தொடர் பணிகளுக்காக... ரங்கார் நாகல் எனுமிடத்தில் சாட்சிபகரும் புதிய விசுவாசி ஹீரா மூலம் அநேகர் நீதிக்குட்பட... குருதாஸ்பூர், பத்திண்டா ஆகிய மாவட்டங்களில் தொடரும் தள ஆய்வுப் பணிகளில் தேவ நடத்துதலுக்காக ஜெபியுங்கள்.

**04 உத்தராகாண்ட்** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 104**

கிறிஸ்துவின் சுவிசேஷம் கேட்ட தீபா குடும்பத்தினர் மனந்திரும்பி, விசுவாசிகள் ஐக்கியத்தில் பங்கெடுக்கின்றனர். சியாம்பூர், ஜெயதேவ்பூர் ஆகிய கிராமங்களில் கர்த்தரின் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது. திறந்தவெளிக் கூடுகையில் 52 பேரும், சிறுவர் வகுப்புகளில் 200 பேரும் பங்கேற்று தேவ வசனங்களுக்குச் செவிசாய்த்தனர். பிரதீத் நகரில் தேவாலயக் கட்டுமானப் பணி நடந்தேறுகிறது, துதியுங்கள்.

தளந்தோறும் தொடரும் உபவாசக் கூட்டங்களில் தேவ அற்புதங்கள் இடம்பெற... விசுவாச அறிக்கை ஆராதனைக்கு ஆயத்தப்படும் 20 பேரும் கர்த்தரைப் பற்றும் அறிவில் வளர... பகவான்பூரில் சுவிசேஷ ஊழியங்கள் துவங்குவதில் தேவ நடத்துதலுக்காக... டயாலிசிஸ் சிகிச்சையிலுள்ள ஊழியர் பிரதீப் குமாரின் மனைவி கவிதாவுக்குத் தேவன் பூரண சுகம் தர ஜெபியுங்கள்.

**05 ஹரியானா** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 34**

ஜடோலா முகாமில் 10 பேர் தங்கள் வருங்காலங்களை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தனர். தார்பிந்த், ஆஷா, துஷார் ஆகியோருக்குக் கர்த்தர் தந்த சுகத்தினால் சுவிசேஷத்திற்குச் சாட்சியாக திகழ்கின்றனர். 16 பணித்தளங்களில் நடத்தப்பட்ட சிறுவர் பள்ளி ஊழியங்கள் 470 பேருக்குப் பயனளித்தது. சஹா தளத்தில் 10 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர், ஸ்தோத்திரம்.

காசநோயுடைய நட்டுசிங் சுகமடைய... எதிர்ப்புகள் நிலவும் சேர்சா, ஜாத்திகாலன் ஆகிய இடங்களில் தேவன் தம் ஊழியர்களை முன்நடத்த... விசுவாசத்தினிமித்தம் இன்னல்களை சந்திக்கும் மீனாவுக்குத் தேவன் துணைபுரிய... சோனிபட், பல்வால், படேகாபாத் மாவட்டங்களிலிருந்து முழுநேர ஊழியர்கள் எழும்ப ஜெபியுங்கள்.

**06 ராஜஸ்தான் – பான்ஸ்வாடா பகுதி** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 459**

பீம்புராவில் ராமு எனும் இளைஞனின் மனமாற்றத்தினால் குடும்பம் தேவ சமாதானம் பெற்றது. 20 பேர் இயேசுவில் விசுவாச அறிக்கைசெய்தனர். மஸ்கா பாடாவில் லக்ஷ்மன் என்பாரின் இல்லம் வேதபாட நிலையமானது. பதி, வகேரியில் இடம்பெற்ற சிறுவர் ஊழியங்கள் 230 பேருக்குப் பயனளித்தது. இயேசுவில் சுகம்பெற்ற பாப்லியின் சாட்சி கர்னவாத் கிராமத்தாருக்குச் சுவிசேஷம் அறிவிக்க ஏதுவாயிற்று, துதியுங்கள்.

பெரு குடும்பத்தாரின் வறுமை நீங்க... ரெகனியா, ரத்தன்புராவில் வேத வசனங்கள் கேட்டோர் உள்ளங்கள் புதிதாக... தள ஆய்வுப் பணிகள் இடம்பெறும் சஜ்ஜன்காட், குஷால்காட் தாலுகாக்களில் பணித்தளங்கள் மேலும் திறக்கப்பட... பீல் ஜனங்கள் நடுவில் தேவன் தந்துள்ள 63 ஆராதனைக் குழுக்களும் சுவிசேஷப் பிரபல்யப் பணியில் ஈடுபட ஜெபியுங்கள்.

**07 உத்தரப் பிரதேசம் – போஜ்புரி** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 1130**

138 கிராமங்களில் நடத்தப்பட்ட தேடுவோர் கூட்டங்களின் பயனாக 157 பேருக்குச் சுவிசேஷத்தில் ஆர்வம் உண்டானது. ஆராதனைக் குழுக்களுக்குப் புதிதாக வருகை தரும் 34 போஜ்புரி குடும்பங்களுக்காக ஸ்தோத்திரம். மறுபிறப்பின் அனுபவம் பெற்ற இளைஞன் ஜீதேந்திரகுமார் சுவிசேஷத்திற்குச் சாட்சி பகருகிறார். கோல்கும், முசாஹி கிராமத்தார் வசனங்கேட்பதில் மனோற்சாகம் கொண்டுள்ளனர், துதியுங்கள்.

குரீபூரில் காசநோயால் அவதியுறும் அஞ்சலி தேவி சுகமடைய... பாலி, கஜுரி ஆகிய இடங்களில் வசிக்கும் ஜனங்களின் வாழ்வாதாரங்கள் உயர... தையற்பயிற்சிக் கூடங்கள் மேலும் புதிய தளங்களில் திறக்கப்பட... நேவடா தள ஆலயக் கட்டுமானப்

பணிகளின் நிறைவுக்காகவும், இன்னும் 16 தளங்களில் ஆலய நிலங்கள் வாங்கப்படவும் ஜெபியுங்கள்.

**08 உத்தரப்பிரதேசம் – லக்னோ விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 1476**

சாரதாநகரில் வேதபாட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 32 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். விஷால் வீட்டாரனைவரும் இயேசுவையே சேவிக்க முன்வந்துள்ளனர். காசநோயினால் அவதியுற்ற ரோகன் ஜெபத்தினால் இயேசுவின் தொடுதலைப் பெற்றார், ஸ்தோத்திரம்.

கஸ்தா, கனேஷ்பூரில் தேவ வசனங்கள் செல்லும் வாசல்கள் திறக்கப்பட... மொகமத்பூர், பகாரி தள ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைக்கான ஆயத்தங்களுக்காக... தேடுவோர் கூடுகைகள் தொடரும் ஜாமுனியாவில் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட... ஒயல் தள ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக ஜெபியுங்கள்.

**09 பீஹார் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 880**

18 பேர் கிறிஸ்துவில் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். சிறுவர் ஊழியங்களின் மூலம் 863 பேருக்கு நன்னெறி பாடங்களும் பரிசுத்த வாக்கியங்களும் போதிக்கப்பட்டன. பக்சார் மாவட்டத்தில் சர்வே மூலம் 63 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 5 பணித்தளங்களில் நிறைவடைந்த வாலிபர் முகாம்களைத் தொடர்ந்து தேவ ஊழியங்கள் வளரக் காண்கிறோம், ஸ்தோத்திரம்.

போஜ்புரி விசுவாசிகளின் மேளாவுக்கான ஆயத்தப்பணிகளுக்காக... களங்களில் கர்த்தர் தந்த 7 ஆலயங்களுக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டப்பட... நாகிசாக் தள விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... விசுவாசிகள் எண்ணிக்கையில் உயரும் 10 ஆராதனைக் குழுக்களுக்கு ஆலய நிலங்கள் வாங்கப்பட... ஜெபியுங்கள்.

**10 ஜார்க்கண்டு விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 625**

ஹரூப் தளத்தின் இரவுக் கூட்டம் 60 புதிய ஆத்துமாக்களுக்குப் பயன் தந்தது. பாவ அறிக்கைசெய்த 22 பேர் இயேசுவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். ஒராவன் விசுவாசிகளின் மேளாவைத் தொடர்ந்து பார்னோ பகுதியில் சுவிசேஷத்திற்கான அநுகூல வாசல்கள் திறந்துள்ளன. தேடுவோர் கூடுகைகளின் பயனாக 68 பேருக்கு இயேசுவின் அன்பு விளக்கிக் கூறப்பட்டது, ஸ்தோத்திரம்.

புதிய விசுவாசி சியாம் புயான் துவங்கியுள்ள செங்கல் உற்பத்தி பணிகள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட... துரியாம்பா, கெனபித்தா ஆகிய தளங்களில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயர... 8 வருடங்களாக மனநோயுடன் போராடும் கரிஷ்மாவைக் கர்த்தர் சுகப்படுத்த... ஊழியர் இம்மானுவேல் குஜூரை இழந்துள்ள மனைவி மற்றும் 2 பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**11 மேற்கு வங்காளம் – கூச்பிஹார் பகுதி விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 4**

நற்செய்தி நிரல்கள் மூலம் திபுலைன் கிராமத்தில் 60 பேருக்குத் தேவ அன்பு தெரிவிக்கப்பட்டது. 4 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்ற அஸ்ரிதா ஒராவன் சுவிசேஷத்திற்குச் சாட்சிபகருகிறார். தோவாலா பஸ்தியில் வசனங்கேட்டவர்களுள் 3 குடும்பங்கள் கர்த்தரை அறியும் ஆர்வங்கொண்டுள்ளனர். சால்துராவில் அறிவிக்கப்பட்ட தேவச் செய்தியினால் 15 ஆத்துமாக்கள் பயனடைந்தன, துதியுங்கள்.

மனநோயுடைய 26 வயது இளைஞன் அருண் லோகர் இயேசுவின் நாமத்தில் குணமடைய... ருயிதுங்கா தள ஜனங்களுக்குச் சாலை வசதிகள் கிடைக்க... தேவ ஊழியங்களுக்குத் தடைவிதிக்கும் சுகுமாரின் மனந்திரும்புதலுக்காக... ஊழியர்

களுக்கு வாடகை வீடுகள் மறுக்கப்படும் மோத்திராம் லைன், உத்தர் பனியேல்குரி ஆகிய இடங்களில் ஊழியர்கள் தங்கும் அறைகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

### 12 மேற்கு வங்காளம் – டார்ஜிலிங் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 41

டாய்பூ தள விசுவாசிகள் ஐக்கியத்தில் 3 புதிய ஆத்துமாக்களைத் தேவன் இணைத்தார். தேவ வசனங்கேட்ட அஜய் டிக்கா போதை வஸ்துக்களுக்கு முற்றுப்புள்ளியிட்டார். கவால் ஒராவனின் வீட்டில் துவங்கிய வேதபாட வகுப்பில் 10 பேர் வசனம் கற்கின்றனர். உர்மா தூரியின் இல்லம் சுவிசேஷ வேலைக்கெனத் திறக்கப்பட்டது; 21 பேர் தேவ அன்பை அறிந்துள்ளனர், துதியுங்கள்.

பிஜிலிமோனி, கமலா ஆகிய கிராமங்களில் தொடரும் தேடுவோர் கூட்டங்கள் பலன்தர... கன்டிவிதா கிராமத்தில் நற்செய்தி கேட்ட 36 பேரின் உள்ளங்கள் இயேசுவில் புதிதாக... மனநோயுடைய தாமஸ் குஜூரின் பூரண சுகத்திற்காக... ரத்தன்லால்பள்ளியில் துவங்கிய சிறுவர் ஊழியங்கள் மிகுந்த கனிதர ஜெபியுங்கள்.

### 13 மேற்கு வங்காளம் – கொல்கத்தா விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 188

18 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கையிட்டனர். தேடுவோர் கூட்டங்கள் 85 கிராமங்களில் நிறைவடைந்துள்ளன; புதிய தொடர்புகளைப் பணியில் தந்துள்ளன. ஊழிய ஒருங்கிணைப்பாளர் பிகாஷ் மல்லிக்கின் மகன் சுபாரா ஜோதிக்கு முடக்கு வாத வியாதியிலிருந்து சுகம் கிடைத்தது. தாரண், கர்னா ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் தேவனால் உருவாகியுள்ளன, துதியுங்கள்.

புத்தாலயம் பெற்றுள்ள கொனுவா தள விசுவாசிகள் மூலம் அண்டை கிராமங்களுக்கு சுவிசேஷ வெளிச்சம் கிடைக்க... எஸ்றா முகாம்கள் வாயிலாக 50 ஊழியர்களைத் தெரிந்தெடுப்பதில் தேவ நடத்துதலுக்காக... புதிய விசுவாசிகளான நாதுமண்டி, மமதா தாராவை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் கர்த்தர் நிரப்ப... சுவிசேஷம் கேட்ட கஸ்டோர் கிராம ஜனங்களின் உள்ளங்களில் தூயாவியானவர் கிரியைசெய்ய ஜெபியுங்கள்.

### 14 சிக்கிம் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 38

தோகடார் கிராமத்தில் பூசான் ராய் வீட்டாரைச் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்தார். கிறிஸ்து இயேசுவில் தங்கள் விசுவாசத்தை 7 பேர் அறிக்கைசெய்தனர். முழுநேர ஊழியத்திற்கு 3 இளைஞர்கள் முன்வந்துள்ளனர். பாக்யாங், கேய்சிங், கேங்டாக் மாவட்டங்களில் 90 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன, துதியுங்கள்.

விசுவாசத்தினிமித்தம் இடையூறுகளைச் சந்திக்கும் சுனிதா லிம்பூவுக்குத் தேவன் துணைபுரிய... லோயர் ரிம்பி, லோயர் பலுதாங் ஆகிய தளங்களில் ஊழியர்கள் தங்கும் அறைகள் கட்டப்படவேண்டும்... கிரண் தாபா, யோங்கல் லெப்சா ஆகிய புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக... மிங்மா தாமாங் என்பாரின் சாட்சியினால் வீட்டாரனைவரையும் கர்த்தர் தமக்குச் சொந்தமாக்க ஜெபியுங்கள்.

### 15 அசாம் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 114

கிறிஸ்து இயேசுவில் தங்கள் புதிய விசுவாசத்தை 6 பேர் அறிக்கை செய்தனர். சந்தாலி ஜனங்கள் நடுவிலிருந்து 5 புதிய குடும்பங்கள் ரங்கிஜோரா ஆராதனைக் குழுவில் இணைந்துள்ளனர். மங்கள் சோரன், சோப்னா மார்டி ஆகியோரின் மனம் கிறிஸ்துவில் புதிதானது. பொய்குவாகாவ், ஹேமாய்லங்தே ஆகிய இடங்களில் வேத வசனங்கள் செல்லும் அநுகூல வாசல்கள் திறவுண்டன, துதியுங்கள்.

மோகன்பூரில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய ஆத்துமாக்கள் பங்கேற்றுப்

பயனடைய... விசுவாசத்தைவிட்டுப் பின்வாங்கிப்போன சான்ஶ்ரீ, ஃபுர்ணிமா ஆகியோரின் இரட்சிப்பு இயேசுவில் ஸ்திரப்பட... ஹத்திபுடா கிராம இளைஞர்களைச் சுவிசேஷத்தினால் நல்வழிப்படுத்தும் பிரயாசங்களுக்காக... மழை, வெள்ளத்தினால் உயிர், உடைமைகள், வாழ்வாதாரங்களை இழந்துள்ள குடும்பங்களின் மறுவாழ்வுக்காக ஜெபியுங்கள்.

**16 மணிப்பூர் — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 78**

சுவிசேஷத்திற்கு முதன்முறையாய்ச் செவிசாய்த்த 342 புதிய ஆத்துமாக்களுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஹெய்னோபோக் தளத்தில் தேவ பணிகளுக்கு எதிர்நின்ற 5 குடும்பங்களைத் தேவன் சந்தித்தார். விசுவாச அறிக்கை ஆராதனைக்கு 78 பேர் ஆயத்தப்படுகின்றனர். தோம்பா, ராணிபாலாவின் இல்லங்கள் வேதபாட நிலையங்களாய்த் திகழ்கின்றன, துதியுங்கள்.

ஜிரிபாம் பிராந்தியத்தில் நிலவும் பதட்டங்கள் நீங்கவும், ஜனங்கள் சமாதானத்துடன் வாழவும் ஜெபியுங்கள். தேவ பிள்ளைகளுக்கு எதிராய் நிற்கும் குமோஜம்பா, பர்மோத் சிங் ஆகியோரின் உள்ளங்களில் தேவன் கிரியைசெய்ய... டின்பியைக் காசநோயிலிருந்தும் தினானுவைக் கேன்சர் வியாதியிலிருந்தும் கர்த்தர் விடுவிக்க... வீடு, வாசல்கள், ஆலயங்கள், உடைமைகளை இழந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள ஜனங்களின் வாழ்வாதாரங்களுக்காக ஜெபியுங்கள்.

**17 திரிபுரா — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 228**

39 பேர் தங்கள் புதுவாழ்வைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர். அதாய்பாரிகாமி ஆராதனைக் குழுவில் 2 குடும்பங்கள் புதிதாய் இணைந்துள்ளன. தேடுவோர் கூட்டங்கள் தொடரும் போவங்காமி எனுமிடத்தில் சுவிசேஷ வேலைக்கான அநுகூல வாசல்கள் திறந்துள்ளன. 4 பணித்தளங்களில் இடம்பெற்ற ஆலயப் பிரதிஷ்டை ஆராதனைகள் இயேசுவுக்கு மகிமை சேர்த்தது, அல்லேலூயா!

ருதாய்காமி தளச் சபையார் சுவிசேஷப் பணிகளில் ஈடுபட... கும்சிங் காமி தளத்தில் காணப்படும் ஊழியத் தடைகளைத் தேவன் அகற்ற... செச்சுவாகாமி சபை மூப்பரின் பிரிவால் வாடும் குடும்பத்தார், சபையாரின் ஆறுதலுக்காக... 7 வருடங்களாகக் கர்ப்பத்தின் கனிக்குக் காத்திருக்கும் குஞ்சோ - அம்ரித்தா தம்பதியருக்காக ஜெபியுங்கள்.

**18 ஒடிசா – கஜபதி, கஞ்சம் — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 823**

44 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர், அல்லேலூயா. ஜங்டார், லுவபா, சபலாடா ஆகிய தங்களில் எதிர்ப்பாளர்களாகச் செயல்பட்டவர்களைத் தேவன் தம் அன்பினால் சந்தித்தார். தனகாவ், அதியார், குருகுடா ஆகிய 3 கிராமங்களில் கர்த்தரின் சபைகள் உருவாகியுள்ளன. புதிய விசுவாசி கோஷிராம் பிரதானை சதியாளர்கள் கரங்களினின்று தேவன் விடுவித்தார்.

பத்ராபூர் தாலுகாவில் சர்வே மூலம் தெரிவுசெய்யப்பட்ட 50 கிராமங்களுக்கு ஊழியர்கள் அனுப்பப்பட... லங்கலகுனியா பகுதியில் 118 கிராமங்களில் கர்த்தர் தந்த ஊழியங்கள் மூலம் மறுமலர்ச்சி உண்டாக... அங்குலி, புராதால் பிராந்தியங்களுக்கு ஊழியர்களை அனுப்புவதில் தேவ நடத்துதலுக்காக... கிராமியப் பாடல்கள், இசை வாயிலாக நற்செய்தி கூறும் ஊழியர் சந்தோஷ் கோமாங்கோவின் பிரயாசங்களைத் தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**19 ஒடிசா – ஹோ, சந்தாலி — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 362**

"இயேசுவே இரட்சகர்" என்று தங்கள் விசுவாசத்தை 25 பேர் அறிக்கைசெய்தனர். ஹோ, சந்தாலி விசுவாசிகள் நடுவில் 3 ஆலயங்கள் பிரதிஷ்டை ஆராதனைகள் கண்டன.

சிகார்கத்தி தள விசுவாசிகளின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்காக - வசன வாஞ்சைக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். எஸ்றா முகாமின் இறுதிக்கட்ட தேர்வின் மூலம் 15 இளைஞர்கள் ஊழியப்பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர், துதியுங்கள்.

கதக்டாலா தளச் சபையார் மூலம் அண்டை கிராமங்கள் வசனவெளிச்சம் பெற... 5 தளங்களில் இடம்பெறும் ஆலயக் கட்டுமானத்தின் நிறைவுபணிகளுக்காக... ஹோ, சந்தாலி ஊழியர்களைப் பயிற்றுவிக்க கரஞ்சியாவில் பயிற்சி நிலையம் அமைக்கும் முயற்சிகளுக்காக.... உபவாச ஜெபங்கள் தொடரும் சுக்கிலாகாலி, பகுவாபால் பணி மையங்களில் தேவ கிரியைகள் பெருக ஜெபியுங்கள்.

### 20 ஒடிசா – குயி, சம்பல்புரி — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமானோர்: 268

கெத்தபாஜு பகுதியில் நற்செய்திப் பணிபுரிய கிராம ஜனங்களின் அழைப்பு பெற்றுள்ளோம். நகதிசாருவில் இடம்பெற்ற விசுவாச அறிக்கை ஆராதனையில் 6 பேர் தேவ பிள்ளைகளாயினர். பிரேம்ஜாரியில் ஆராதனைக் குழு உதயமானது; பாண்டுலியில் ஆலய நிலம் ஆயத்தமாக்கப்பட்டது. சம்பல்புரி ஜனம் வாழும் 150 கிராமங்கள் சர்வே மூலம் ஊழியத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன, துதியுங்கள்.

கதலிபலியில் இயங்கும் வேதபாட வகுப்பு ஆராதனைக் குழுவாக மலர... மேற்கு ஒடிசாவில் 5 தள ஊழியர்களுக்கு சைக்கிள்கள் தேவை... குயி விசுவாசிகளுக்கான சிறப்பு மேளா பனசபாடி தளத்தில் இடம்பெறவுள்ளது... லாதர் தள ஊழியர்களுக்கு எதிராய்ச் செயல்படுவோர் சுவிசேஷத்தினால் தொடப்பட ஜெபியுங்கள்.

### 21 ஒடிசா – ராயகடா மாவட்டம் — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமானோர்: 306

மதுசூதன்பூர் ஆராதனைக் குழுவில் 4 புதிய ஆத்துமாக்கள் இணைந்துள்ளன. 54 இளைஞர்கள் பங்கேற்ற பஞ்சபந்தபோ வாலிபர் முகாம் ஊழிய வளர்ச்சிக்கு ஏதுவாயிற்று. மரிகுடா, ஸ்ரீராம்பூரில் விசுவாசிகளின் எண்ணிக்கை உயரக் காண்கிறோம். லக்ஷ்மி சாபர் குடும்பத்தின் மூலம் கனந்திரி தள ஊழியத்தில் தேவன் புதிய தொடர்புகளைத் தருகிறார், துதியுங்கள்.

குப்ரிகுடாவில் விசுவாச அறிக்கைசெய்த 4 பேர் மூலம் அவர்தம் குடும்பங்களும் இரட்சிப்பின் மார்க்கம் கண்டடைய... நுவகான் கிராம இளைஞர்கள் இயேசுவுக்குத் தங்கள் இதயங்களைக் கொடுக்க... சிந்தலகுடாவில் சாராயப் பழக்கத்திற்கு அடிமை யாயுள்ள குடும்பங்கள் சுவிசேஷத்தினால் மீட்கப்பட... போர்லண்டி, ஹிகிரிகுடா கிராமத் தலைவர்களின் உள்ளங்கள் வசனங்களால் தொடப்பட ஜெபியுங்கள்.

### 22 சத்தீஸ்கடு – ராய்பூர் பிராந்தியம் — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமானோர்: 30

தம்தாரி ஜில்லாவில் 50 கிராமங்கள் ஊழியத்திற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சோன்புரி, டாடா பிலாஸ்பூர் ஆகிய இடங்களில் வேதபாட வகுப்புகள் துவங்கப் பட்டுள்ளன. 75 கிராமங்களில் தேடுவோர் கூட்டங்கள் 760 ஆத்துமாக்களுக்கு வசனங்களைக் கொடுக்கும் வாய்ப்பாக அமைந்தது. கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 6 பேர் அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

ராய்பூர் பணிமையத்திற்கு கணினி, இருசக்கர வாகனம் தேவை... தையற்பயிற்சி வகுப்புகள் மூலம் அபன்பூர், மந்திர்ஹஸோடு தள ஜனங்களுக்குச் செய்யும் சேவை பலன் தர... குல்லு தளச் சபையார் சுவிசேஷ அறிவிப்புப் பணியில் ஈடுபட... விசுவாசி கள் பெருகும் துருக் ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்க ஜெபியுங்கள்.

### 23 சத்தீஸ்கடு – சாம்பா பிராந்தியம் — விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமானோர்: 140

சுவிசேஷம் கேட்ட ஜெய்தான் டோப்பா போதை வஸ்துக்களுக்கு முற்றுப்புள்ளி யிட்டார். கிறிஸ்து இயேசுவில் தங்கள் விசுவாசத்தை 9 பேர் அறிக்கை செய்தனர்.

5 வருடங்களாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்த நிரேஷ் பாய் மஞ்சி இயேசுவால் விடுவிக்கப்பட்டார். குடி வெறியினால் விசுவாசிகளுக்கு விரோதமாயிருந்த சந்தீப் எக்காவைச் சுவிசேஷம் சந்தித்தது; குடிப்பழக்கம் நிறுத்தம் கண்டது, ஸ்தோத்திரம்.

கடந்த ஓராண்டு காலமாக மனநோயினால் அலைக்கழிக்கப்படும் அஜய் டிர்கி குணமடைய... லாய்கு, கோத்ரிபாணி ஆகிய இடங்களில் கர்த்தரின் சபை ஸ்தாபிக்கப்பட... போலாகுமாரின் மதுப்பழக்கத்தினால் வாடும் குடும்பத்திற்காக... மூச்சிழுப்புடன் கிட்னி சம்பந்தமான வியாதியும் சோமரு டோப்போவைக் கடந்த 3 வருடங்களாக வாதிக்கிறது, ஜெபியுங்கள்.

**24 மத்தியப்பிரதேசம் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 621**

8 வருடங்களுக்குப் பின் குழந்தைப் பாக்கியம் பெற்ற ராதா குடும்பம் இயேசுவுக்குச் சாட்சிபகருகிறது. நற்செய்திக்கு அடிபணிந்த ரமேஷ் போதை அடிமைத்தனத்தினின்று விடுதலை அடைந்தார். புதிய விசுவாசி சந்தீப் தன் இல்லத்தைச் சுவிசேஷப் பணிக்கெனத் திறந்தளித்தார். 3 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

சவானி தளத்தில் ஆராதனைக் குழு துவங்கும் பிரயாசங்களுக்காக... ஊழியர் சங்கர் சிங்காள் என்பாருக்கு விரோதமாய்ச் செயல்படுவோரைத் தேவன் சந்திக்க... பாவ்தி கிராமத்தில் வசனங்கேட்ட பார்சிங் வீட்டாரின் உள்ளங்கள் புதிதாக... புதிய விசுவாசிகளான கனய்யா, சுனில் ஆகியோரின் சாட்சியின் ஜீவியம் அநேகரை கிறிஸ்துவண்டை நடத்த ஜெபியுங்கள்.

**25 குஜராத் – அகமதாபாத் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 484**

ஊழியர் தினேஷ்பாய் நாயக் தளத்தில் தங்குவதற்கேற்ற வாடகை வீட்டைத் தேவன் ஆயத்தம்செய்தார். வியாதிப்படுக்கையிலிருந்து கர்த்தரால் சுகம்பெற்ற பிரவீன்பாய், தரமிஸ்தாபேனுக்காக ஸ்தோத்திரம். வங்காடி தளத்தில் லகாபாய் என்பாரின் ஊழிய ஈடுபாட்டிற்காக ஸ்தோத்திரம். கெடியா கிராமத்தின் மூத்த விசுவாசி ராம்சுபாய் தன் நிலத்தை ஆலயக் கட்டுமானத்திற்கென அர்ப்பணிக்க முன்வந்துள்ளார், துதியுங்கள்.

ஆரவல்லி மாவட்டத்தில் தளங்கள் திறப்பதில் தேவசகாயம் கிடைக்க... அசுத்த ஆவியினால் அலைக்கழிக்கப்படும் பங்கஜ்பாய் பர்கி இயேசுவின் நாமத்தில் விடுதலை பெற... விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கிப்போன ஹமீர்பாய், வீர்சிங்பாய், ரஞ்சித்பாய் குடும்பங்களுக்காக... கதியாவ் தளத்தில் ஆலயக் கட்டுமானத்திற்கான ஆயத்தப்பணிகள் இடம்பெறுகிறது, ஜெபியுங்கள்.

**26 குஜராத் – டாங் மாவட்டம் விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 38**

பிபுபாடா தளத்தில் தேவாலயக் கட்டுமானப் பணி துவங்கியது. 3 பணி மையங்களில் இடம்பெற்ற சிறுவர் வேதாகமப் பள்ளிகள் 79 பேருக்குப் பலனளித்தது. தேவ வசனங்களைக் கேட்ட மகன்பாய் பாரிஷ், மதுப்பழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட்டார். 10 பேர் தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவில் அறிக்கைசெய்தனர், துதியுங்கள்.

உக்கலபானி பகுதியில் மதுபானங்களைக் காய்ச்சுவோர் மனந்திரும்பவும், சூதாட்டப் பழக்கங்கள் அகலவும் ஜெபியுங்கள். கட்மால், மகர்தார் ஆலய நில ஆவணப் பணிகள் நிறைவடைய... 250 கிராமங்கள் - 50 ஊழியர்கள் எனும் டாங் மாவட்ட ஊழியத் திட்டம் இயேசுவின் மகிமைக்காய் நிறைவேற... ஊழியரின் வருகைக்காய் 19 புதிய கிராமங்கள் காத்திருக்கின்றன, ஜெபியுங்கள்.

**27 மகாராஷ்டிரா விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 111**

நான்டேடு பகுதியில் ரூபாலி கெய்க்வாத், நாக்நாத் தோட்ரேயின் குடும்பங்கள்

கர்த்தரைப் பற்றும் விசுவாசத்திற்குள் வந்துள்ளன. புதிய ஆலயம் பெற்ற சுலேசாரி தளச் சபையார் சுவிசேஷப் பணியில் ஆர்வங்கொண்டுள்ளனர். கங்கோலியில் இடம்பெற்ற 3 நாள் உபவாச ஜெபத்திற்குப் பின் ஊழிய வளர்ச்சி காண்கிறோம். பிகார்மவுசியில் ஆலயம் கட்டுவதற்கான அனுமதி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றோம், ஸ்தோத்திரம்.

கர்ப்பத்தின் கனிக்காக ஜெபிக்கும் சுரேகா - திலிப் குடும்பத்திற்காக... பாலாஜி சூர்யவன்சியின் போதைப் பழக்கத்தினால் அவதியுறும் வீட்டாருக்காக... மோகனே, கதக் ஆகிய தளங்களில் தொடரும் தேடுவோர் கூட்டங்களில் புதிய நபர்கள் பங்கெடுக்க... ஹந்தர்குலி, மங்கியில் சுவிசேஷ வேலைக்கான அநுகூல வாசல்கள் திறக்கப்பட ஜெபியுங்கள்.

**28 தெலுங்கானா** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 633**

7 வருடங்களுக்குப் பின் புத்திர பாக்கியம் பெற்ற விஷ்ணு - சுமலதா வீட்டார் இயேசுவுக்கு மகிமை சேர்க்கின்றனர். கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை 10 பேர் அறிக்கை செய்தனர். சென்னம்பள்ளி தளத்தின் செஞ்சு விசுவாசிகள் நடுவில் ஆலயக் கட்டுமானப் பணி தேவ தயவால் வளர்ந்தேறுகிறது. வட்வர்லபள்ளி பகுதி வாழ் ஜனங்களின் நல்வாழ்வுக்கென தையற்பயிற்சிக் கூடம் அமைக்கும் பணி துவங்கியது, துதியுங்கள்.

கேன்சர் வியாதியினால் பீடிக்கப்பட்டுள்ள ஊழியர் சாமுவேலின் மனைவி ஜெயா கர்த்தரால் சுகம்பெற... ராய்போலே பிராந்திய ஊழியங்களில் நிலவும் எதிர்ப்புகள் மறைய... நல்கொண்டா, யாதாதிரி ஜில்லாவின் பணித்தளங்களுக்கு 100 தெலுங்கு வேதாகமங்கள் தேவை. நாகர்கர்னூல் மாவட்டத்தின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவை, ஜெபியுங்கள்.

**29 ஆந்திரப்பிரதேசம் – அச்சப்புவலசா விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 338**

பொடிகுடா, நாகம்மகுடாவில் 14 இளைஞர்கள் தங்கள் விசுவாசத்தை இயேசுவில் அறிக்கைசெய்தனர். பொடிசா ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் 750 பேர் பங்கேற்று கிறிஸ்துவுக்கு மகிமைசேர்த்தனர். புதிய ஆலயம் பெற்றுள்ள புள்ளமானுகுடா தள விசுவாசிகள் நடுவில் சுவிசேஷ வேலைக்கான ஆர்வம் காண்கிறோம். கும்மலக்ஷ்மி புரம், மகேந்திரபுரம் ஆகிய பணிமையங்களில் விசுவாசிகள் எண்ணிக்கையிலும், ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளரக் காண்கிறோம், துதியுங்கள்.

மூளைக் கட்டியினால் சந்து எனும் 14 வயது மகனை இழந்துள்ள பெற்றோரின் ஆறுதலுக்காக... சாவித்திரி வீட்டாரின் சாட்சியினால் செந்தரகுடா கிராம ஜனங்களின் உள்ளங்கள் புதிதாக... வேத வசனங்களுக்குச் செவிசாய்க்கும் ஆதித்யா குமார் குடும்பம் ஆராதனைக் குழுவில் இணைய... தண்டுவடப் பாதிப்பினால் நடக்க இயலாதிருக்கும் சோமேஷ் என்பாரின் சுகத்திற்காக ஜெபியுங்கள்.

**30 ஆந்திரப்பிரதேசம் – வட பகுதி** **விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாவோர்: 338**

இரத்த சம்பந்தமான நோயுடன் போராடிய அலக்யாவை இயேசு சுகமாக்கி, கோதுலகும்மடா தளத்தில் சாட்சியாக நிறுத்தினார். 10 வருடங்களுக்குப் பின் புத்திர பாக்கியம் பெற்ற பிரதாப்-சிரீஷா குடும்பத்தினர் இயேசுவுக்கு மகிமை சேர்க்கின்றனர். மூளைக்காய்ச்சல் வியாதியினால் மரண விளிம்பிலிருந்த யமுனாவுக்குத் தேவன் மறுவாழ்வு அளித்தார். திறந்தவெளிப் பிரசங்கத்தின் மூலம் சீமலவாணி வலசாவில் 150 ஆத்துமாக்களுக்குத் தேவ செய்தி எட்டியது, துதியுங்கள்.

புதிய விசுவாசி கலாவதிக்கு எதிராய் எழும்புவோர் உள்ளங்களில் கர்த்தர் கிரியைசெய்ய... பாலம் பணித்தள ஆலய விரிவாக்கப்பணிகளுக்கு உகந்த அனுமதிகள் கிடைக்க... நுரையீரல், கிட்னி பாதிக்கப்பட்ட மகேஷ் எனும் 31 வயது நபருக்கு தேவன் மறுவாழ்வுகொடுக்க... கருகுபில்லி மண்டலத்தின் உள்ளான கிராமங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவை, ஜெபியுங்கள்.

6 பேர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கைசெய்தனர். கோக்யா தளத்தில் இரு மாதங்களாகப் பிசாசினால் அலைக்கழிக்கப்பட்ட அனிதாவை இயேசு விடுவித்தார். தடோலா கிராமத்தில் அம்பாதாஸ் வீட்டாரைச் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்தார். கர்த்தராகிய இயேசுவின் சுவிசேஷத்தை 170 ஆத்துமாக்கள் முதன்முறையாய்க் கேட்டனர், துதியுங்கள்.

தொட்டசெல்லூரு தளத்தில் நிறைவடைந்த தெபோராள் முகாமின் பின்தொடர் பணிகளுக்காக... நாயக்கனஹட்டியில் வசனங்கேட்ட சுனில் குடும்பத்தாரின் இரட்சிப்புக்காக... தேடுவோர் கூடுகைகள் தொடரும் மொகலஹள்ளியில் தேவ கிரியைகள் பெருக... சுவிசேஷ விதைகள் விதைக்கப்பட்ட நாகாரம்கரேயில் கர்த்தர் புதிய ஆத்துமாக்களைத் தர ஜெபியுங்கள்.

# கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார்



கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஆந்திராவில் சோரா இனத்தவர் வசிக்கும் புள்ளமனுகுடா மலைத் தளத்தில் ஆலயம் கட்டவும், 22.06.2024 அன்று நிர்வாக இயக்குநர் திரு. வில்சன் அண்ணன் அவர்களுடன் குடும்பமாகச் சென்று ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொள்ளவும் தேவ நடத்துதல் பெற்றோம். ஆராதனை ஒழுங்குகள் மிக நேர்த்தியாக இருந்தது. சோரா இன மக்களின் பாரம்பரிய வரவேற்பு, அன்பு, சிறந்த உபசரிப்பு என்றுமே மறக்கமுடியாதது.

பயண வழியில் பல விஷ்வவாணி ஆலயங்களைக் கண்டோம்; விஷ்வவாணியின் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ ஊழியர்களைக் கண்டோம். இவ்வூழியத்தால் வியாதியஸ்தர்கள் பயனடைகிறார்கள். அன்று இரவு ஆபிரகாம் நகர் தளத்தில் நடைபெற்ற திறந்தவெளி தெருமுனைக் கூட்டத்தில் சோரா விசுவாசிகள் உற்சாகத்தோடு தேவனைத் துதித்துப்பாடி ஆராதித்தபோது இணைந்து இயேசுவை மகிமைப்படுத்தினோம். கோவில்பட்டி நெகேமியா பில்டிங் டிரஸ்ட் மூலமாக பொடிசா தளத்தில் 30.06.24ல் நடந்த ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் தேவ மகிமை கண்டோம். அச்சப்புவலசா ஊழியர் பயிற்சி மையத்தில் தங்கிய எங்களை மிகவும் அன்பாய்க் கவனித்துக் கொண்டனர் ஊழியர்கள். காப்பகச் சிறுவர்களை கல்வியறிவோடும், கர்த்தரின் வழியிலும், ஆவிக்குரிய நல்லொழுக்கங்களோடும் வளர்த்தெடுக்கும் சமூக முன்னேற்றப்பணிகள் போற்றுதற்குரியது. தேவ ஊழியர்கள் மிக உற்சாகமாய் தேவ பணியில் ஈடுபடுவதும் தேவ ராஜ்யத்தை ஏகமாய்க் கட்டுவதும் காணக்கிடைத்த பேரின்பம். தேவ ஊழியத்தை ஜெபத்தாலும் பொருளுதவியினாலும் இன்னும் தாங்குவது நம் பிரதான கடமை. மிகுந்த பொறுப்புகள் நடுவிலும் தளங்களில் எங்களுடன் பயணித்த நிர்வாக இயக்குநர் மற்றும் ஊழியர்களுக்கு நன்றி! தேவனுக்கே துதி, கனம், மகிமை உண்டாகட்டும்! – திருமதி. ஜெபக்கனி ஜெயபால்.

**உங்கள் அன்பின் ஈகையினை ஆன்லைனில் அனுப்புவதற்கான வங்கி விபரங்கள்**

Bank : State Bank of India A/C Name: VISHWA VANI
A/C No. : **1015 1750 252** IFS Code : **SBIN0003273**
Branch : Amanjikarai, Chennai - India.
இரசீது அனுப்புவதற்கு ஏதுவாக தங்கள் முகவரியைத் தயவாய்த் தெரிவியுங்கள்.
✆ 9443127741, 9940332294

UPI ID
vvadmin@sbi
UPI Name:
VISHWAVANI

குடுக் ஜனக்கூட்டம் நடுவில்

# ஓர் கோதுமை மணி



குடும்பத்துடன் ஊழியர் இம்மானுவேல் குஜுர்

கர்த்தரில் பெற்ற வெளிச்சத்தை மலை மேலிருக்கும் பட்டணம் போன்று வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும் சிறு சிறு தீபங்கள் நம் கண்களை விட்டு மறையும்பொழுதும், சுவிசேஷ ஊழியத்தில் இரதமும் குதிரை வீரருமாய் விரைந்து செயல்பட்டவர்கள் இவ்வுலகைக் கடந்து பிரியும்போதும் இருதயம் கலங்கத்தான் செய்கிறது. ஆனாலும், ‘‘உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக’’ என்ற கிறிஸ்து இயேசுவில் தேறுதலும் பெருகுகிறது.

குடுக் எனும் ஜனக்கூட்டம் மிகுதியாய் வசிக்கும் ஜார்க்கண்டு மாநிலத்தின் குக்கிராமங்களுக்குள் மறைந்து கிடந்த மாணிக்கமாக - மண்ணின் மைந்தராக 1990களில் கர்த்தரால் கண்டெடுக்கப்பட்டவர் இம்மானுவேல் குஜுர். சர்னா என்ற வழிபாட்டின் வழக்கத்தில் தன் 20ம் வயது வரை தீவிரமாய் இருந்தவர். விஷ்வவாணி ஊழியர் சில்வானஸ் டிர்கி என்பாரின் சந்திப்பு இவ்விளம் வாலிபரைச் சிந்திக்க வைத்தது, சிலுவை அடிவாரம் சேர்த்தது. ‘தமஸ்கு வீதியின் அனுபவத்தை’ இயேசு இவருக்குத் தந்தார். கண் திறக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசுவுக்காய் - குடுக் சமுதாய மேம்பாட்டிற்காய் - சுவிசேஷத்தின் மேன்மைக்காய் - கிராமங்கள்தோறும் நடந்த அவரது அழகிய பாதங்கள் சுதந்தரித்த கிராமங்களும், சந்தித்த ஆத்துமாக்களும் லோகர்டகா மாவட்டத்தின் மறுமலர்ச்சியில் இன்றளவும் தழைத்தோங்குகின்றன.

1991ல் பயிற்சி ஊழியராக ஊழியப் பாதையில் பயணிக்கத் துவங்கி, சான்ஹோ தளத்தின் முதல் ஊழியராகி, ஜார்க்கண்டு மாநில விஷ்வவாணியின் முதல் ஆலயத்தை பந்தயா கிராமத்தில் கட்டியெழுப்பி, சுவிசேஷ சங்கை உயர்த்தி ஊதியவர் சகோ. இம்மானுவேல் குஜுர்.

31 ஆண்டுகால ஆத்துமாதாயப் பணியில் - தளக் கண்காணி - ஒருங்கிணைப்பாளர் எனும் பொறுப்புகளில் திறம்பட தேவனால் பயன்படுத்தப்பட்டு, இறுதியாக, ஜார்க்கண்டு மாநில முழு ஊழியங்களையும் ஒருங்கிணைத்து நடத்திவந்தார்.

ஜூலை 2022 முதல், சிறுநீரகம் பாதிக்கப்பட்டு வாரம் இருமுறை டயாலிசிஸ் சிகிச்சைக்கு உட்பட்டும், தன்னால் இயன்ற மட்டும் தளங்களுக்குச் சென்று, இளம் ஊழியர்களை ஊக்குவித்து, அலுவலகப் பணியைத் தொய்வின்றி நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தினார்.

தனது 53ம் வயது நிறைவேறுகையில், சற்றே தளர்ந்தவராய், கிறிஸ்துவுக்காய் ஓட மனம் விரும்பியும், சரீரம் ஒத்துழைக்காத நிலையில், ஆத்மாதாயத்திற்காக வேர்வை சிந்தாவிட்டாலும், கண்ணீரைக் கொடுத்து களங்களில் கனிபெருகச் செய்தார். 22.06.2024 அன்று மாலை 7 மணி இவ்வூழியர் ‘என்றும் கர்த்தாவுடன்’ இணையும் வேளையாயிற்று.

கிறிஸ்து இயேசுவின் மகிமையின் சுவிசேஷம் ஜார்க்கண்டு மாநிலத் தளங்களில் உருவாக்கியுள்ள உருமாற்றங்களில் இவ்வூழியரின் பங்கு அதிகம், அதிகமே! அநேகரை நீதிக்குட்படுத்தி, நட்சத்திரக் கூட்டங்களுக்குள் மறைந்துவிட்ட இந்த தேவ மனிதருக்கு ‘நீதியின் கிரீடம்’ நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் தமது நாளிலே தந்தருளுவார்.

கணவர் மறைந்தாலும் கர்த்தரில் தன் நேசம் மறையாமல், குன்றாமல், குறையாமல் காத்துக்கொண்ட அன்புத் துணைவியார் திருமதி. அமர்மணி குஜுர் அவர்களுக்காகவும், ‘அப்பா, இயேசப்பாவுடன் இருக்கிறார்கள்’ என்ற ஆறுதலுடன் தேவபாதம் காத்திருக்கும் வாலிபப் பிள்ளைகள் அமர்லதா, பிரசன்னதா வருங்காலங்களுக்கும் ஜார்க்கண்டு ஊழியர்களின் குடும்பங்களுக்கும் ஜெபிக்கும் உள்ளங்கள் தேவை.

- ஜார்க்கண்டு ஊழியர்கள்

# ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்



சென்னை - தண்டையார் பேட்டையில் நம் ஊழியப் பங்காளரும், விஷ்வவாணி - வானொலிப் பணியின் முன்னாள் ஊழியருமாகிய திரு. ஜான் ராஜேந்திரன் அவர்களது அன்புத் துணைவியார் திருமதி. ஞானஜோதி (வயது 57) அவர்கள் 07.05.2024 அன்று தேவராஜ்யம் பிரவேசித்தார்கள்.



நெல்லை மாவட்டம் - ஆரம்பூண்டார்குளத்தைச் சேர்ந்த நம் ஊழியப் பங்காளர் திரு. சீனிவாசன் (வயது 65) அவர்கள் 29.06.24 அன்று தேவராஜ்யம் பிரவேசித்தார்கள்.



சென்னை - தண்டையார் பேட்டையில் நம் ஊழியங்களுடன் நெருங்கிய தொடர்பும் மிகுந்த ஈடுபாடும், ஊழியர் மீது கரிசனையும் கொண்ட திரு. D. மாசிலாமணி பொன்னுதுரை (வயது 77) ஐயா அவர்கள் 18.06.24 அன்று நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள்.



நெல்லை வேதபுரத்தில் நம் பணிப்பங்காளர் திரு. K. ஜெபஸ்தியான் அவர்களது அன்பு மகன் சகோ. J. ஞானராஜ் (வயது 24) 16.06.2024 அன்று கர்த்தரின் சமுகம் சேர்ந்தார்கள்.



மதுரை அமெரிக்கன் கல்லூரி மேனிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி. ஜெனோவா ஏஞ்சலின் (வயது 55) அவர்கள் 17.05.24 அன்று நித்தியம் பிரவேசித்தார்கள்.

தங்களுக்கு அருமையானவர்களை இழந்து தனிமையில் வாடும் குடும்ப உறுப்பினர்களுக்குச் சகல ஆறுதலும் தேறுதலும் தேவனால் உண்டாகும்படி ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.

## விஷ்வவாணி ஊழிய விபரங்கட்கு தொடர்புகொள்ளுங்கள்

**தென் தமிழகம்:**

**திருநெல்வேலி & தென்காசி:**
✆ 9442006618. 18-B, டேனியல் தாமஸ் தெரு, பாளையங்கோட்டை-2.

**நாகர்கோவில்:** ✆94443-43180

**தூத்துக்குடி:** ✆ 96777-96052

**மத்திப தமிழகம்:** 29A, பிலிப்ஸ் கார்டன், பெத்தானி நகர், விளாச்சேரி ரோடு, பசுமலை, மதுரை-625004. ✆ 98653-52272.

**திண்டுக்கல்:** ✆ 97884-27036

**விருதுநகர்:** ✆ 96598-03075.

**திருச்சி:** 26A, எட்டுப் பட்டை காம்பவுண்டு, திரு.வி.க. நகர், புத்தூர், திருச்சி-620017 ✆ 9488804685

**தஞ்சாவூர்:** ✆ 9443586692

**மேற்கு தமிழகம்:** **கோயம்புத்தூர்:**
45, அன்சாரி வீதி, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009 ✆9442006614.

**சேலம்:** ✆ 9789758300.

**வட தமிழகம்:**

**சென்னை – கோடம்பாக்கம்:**
15/8, முதல் தெரு, சுப்பராயன் நகர், கோடம்பாக்கம், சென்னை – 600024
✆ 96008-88375, 90031-42572

**சென்னை-முகப்பேர்:**
LIG 502, முகப்பேர் ஏரித் திட்டம்
8வது தெரு, முகப்பேர்,
சென்னை-600037. ✆ 9443004640.

**சென்னை – வேளச்சேரி:**
தேவா-சுசி இல்லம், 13/9,
7வது மெயின் ரோடு, தண்டீஸ்வரம் நகர்,
வேளச்சேரி, சென்னை-600042.
✆9003609874.

**சென்னை – பெரும்பாக்கம்:**
5/225-A வீரமா முனிவர் தெரு,
பசும்பொன் நகர், பெரும்பாக்கம்,
சென்னை-600100. ✆9003609874.

**விழுப்புரம் & பாண்டிச்சேரி:**
✆9443997515.

**வேலூர்:** 6, முதல் தெரு, கம்பன் நகர்,
அலமேலுமங்காபுரம்,
வேலூர் - 632009. ✆9600138998

விஷ்வவாணி

# துவாங்கள் கண்ட தேவாலயங்கள் 17



LAXMINAGAR, A.P. - 12.06.24



BADLA KAMI, TRIPURA - 18.06.24



RADHANAGAR KAMI, TRIPURA - 19.06.24



PANDRASINGI, A.P. - 19.06.24



DWARKAI KAMI, TRIPURA - 20.06.24



GURUCHARAN KAMI, TRIPURA - 21.06.24



PULLAMANUGUDA, A.P. 22.06.24



PODDISA, A.P. - 23.06.24



PEDHARAVYAM, A.P. - 28.06.24

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HQ/SD/182/2024-2026 - TAMIL | DATE OF PUBLICATION 20.7.2024
LICENSED TO POST WITHOUT PREPAYMENT - PMG/TS/HQR/SC-02/WPP/2024-2026
Return Requested: VISHWAVANI SAMARPAN, 1-10-28/247, Anandapuram, ECIL Post, Hyderabad-500062.

உத்தரப் பிரதேசம் முதல் ஆந்திரப் பிரதேசம் வரை களங்கள் கண்ட 17 புதிய ஆலயங்களில் கூடி ஆராதிக்கும் முதல் தலைமுறை விசுவாசிகள் எழும்பிப் பிரகாசிக்கிறார்கள், இயேசுவைப் பிரதிபலிக்கிறார்கள், அல்லேலூயா!



KATAGATALA, ODISHA - 29.06.24



SRICHANDANPUR, ODISHA - 06.07.24



BODDAGONDI, A.P. - 30.06.24



GANUA, WEST BENGAL - 07.07.24



SIDAGAM VALASA, A.P. - 30.06.24



SINGADA, ODISHA - 07.07.24



SINGABAHALI, ODISHA - 06.07.24



CHAURATHIA, UTTAR PRADESH - 08.07.24

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society ( Regn. No.17871 of 1987) and printed at CAXTON Offset Pvt. Ltd., 11-5-416/3, Red Hills, HYD-04. and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62. POSTING DATE: 23.07.2024. EDITOR: P. SELVARAJ.